
பக்கங்கள்:-24

காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | சித்திரை 31 | செவ்வாய்க்கிழமை | 14.05.2024 | அதிர்வு 287

முள்ளிவாய்க்கால் கஞ்சி பரிமாறல்:

## கைதான நால்வருக்கும் விளக்கமறியல் உத்தரவு



(ஏ.எச்.ஹஸ்பர்)

திருகோணமலை, சம்பூர் பொலிஸ் பிரிவுக் குட்பட்ட சேனையூர் பகுதியில் முள்ளிவாய்க் கால் கஞ்சி 08▶

# நினைவேந்தலைத் தடுத்து விட்டு தமிழரிடம் வாக்குக் கேட்டு வராதீர்!

## ரணிலுக்குச் சுமந்திரன் சாட்டை




“வடக்கு - கிழக்கில் நினைவேந்தல் நிகழ்வுகளைத் தடுத்து விட்டு எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்களிடம் வாக்குக் கேட்டு வர வேண்டாம் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் சொல்லி வைக்க விரும்புகின்றோம்.”

- இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார். 07▶

# மீண்டும் பொலிஸ் அராஜகம் - அடாவடி இரவில் பெண்கள் கதறக் கதறக் கைது

## நாடாளுமன்றில் சிறீதரன் கடும் கண்டனம்




(எஸ்.நிதர்ஷன்)

“பொலிஸ் அராஜகம், பொலிஸ் அடாவடித்தனம், பொலிஸாரின் மிருகத்தனம் இந்த மண்ணில் மீண்டும் வெளிப்படுத்தப் பட்டுள்ளது. இலங்கை மிக மோசமான நாடு, மிகக் கேவலமான நாடு.” – என்று கடுமையாக விமர்சித்த இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், முள்ளிவாய்க்கால் கஞ்சி சுகாதாரமான முறையில் காய்ச்சப்படவில்லை என்று கூறும் நீங்கள், வெசாக் வருகின்றபோது தெருத் தெருவாக வழங்கும் உணவுக் சுகாதாரம் பற்றி எப்போதாவது கேட்டுள்ளீர்களா?” – என்றும் கேள்வி எழுப்பினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற நிதிக் கட்டளைகள் தொடர்பான 07▶

# மக்களின் நினைவேந்தல்களைத் தடுத்தால் தமிழரின் போராட்ட உணர்வு தீவிரமடையும்

## அரசுக்கு விக்னேஸ்வரன் எச்சரிக்கை



(எஸ்.நிதர்ஷன்)

முள்ளிவாய்க்கால் கஞ்சி பரிமாறிய குற்றச் சாட்டில் மூன்று பெண்கள் உட்பட நால்வர் இரவு வேளையில் மிக மோசமான முறையில் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டமையைக் கண்டித்து தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவரும் யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரனும் கொழும்பிலிருந்து கண்டன அறிக்கை ஒன்றை 06▶

# நினைவேந்தலைத் தடை செய்வது இனவாத வெறிப் போக்கின் உச்சம்

## சபையில் கஜேந்திரன் காட்டம்



(ந.லோகதயாளன்)

“வடக்கு, கிழக்கில் நீதிமன்றங்கள் இனவாதப் பொலிஸாரின் கட்டளைகளுக்குப் பணிந்து செயற் படுகின்றனவா? பொலிஸார் நீதிமன்றங்களுக் குச் சென்று எதனைச் சொன்னாலும் அதனை அப்படியே நீதிமன்றங்கள் ஏற்றுக்கொண்டு செயற்பட வேண்டிய நிலைக்கு 06▶



நாடாளுமன்றத்திலும், மக்கள் மன்றத்திலும் காட்ட வேண்டிய தங்கள் திறமையை – சீத்துவத்தை – நீதிமன்றத்தில் காட்டிக் கொண்டிருக்கிறார்கள் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினர்.

அதிலும் ஒரு வேடிக்கை உண்டு. அந்தக் கட்சி பல்லாயிரம் அங்கத்தவர்களைக் கொண்டது. பல முன்னணித் தலைவர்கள் இருக்கிறார்கள். 06▶

# உறவுகளை நினைவேந்தும் உரிமையை மறுத்து தமிழர்களைச் சீண்ட வேண்டாம்!

## ரெலோ தலைவர் செல்வம் அரசுக்கு எச்சரிக்கை



**'தமிழர்கள் மறைந்த தமது உறவுகளை நினைவேந்தும் நிகழ்வையும் கூட, இனங்களுக்கிடையில் குரோதத்தை ஏற்படுத்துவதற்கு எதிரான சட்டத்தின் மூலம் தடுப்பதற்குக் களம் இறங்கியமை மூலம் தேசிய நல்லிணக்கத்துக்கான கடைசி வாய்ப்பையும் இறுக மூடி இருக்கின்றது இலங்கை ஆட்சிப் பீடம். இது பெரும் துரதிஷ்டவசமானதாகும்."**

**- இவ்வாறு ரெலோவின் தலைவரும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.**

முள்ளிவாய்க்கால் நினைவேந்தலையொட்டி முள்ளிவாய்க்கால் கஞ்சி விநியோகித்தவர்கள் சம்பூரில் ஈவு இரக்கமற்ற முறையில் நள்ளிரவில் பொலிஸாரால் அராஜகமான முறையில் கைது செய்யப்பட்ட விடயத்தையொட்டி "முரசு"வுக்குக் கருத்து வெளியிட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"மக்களின் நினைவேந்தல் உரிமை மறுக்கப்பட முடியாத அடிப்படை உரிமையாகும். சர்வதேசத் தரப்புக்கள் ஐ.நா. மனித உரிமைகள் அவையிலேயே திரும்பத் திரும்ப இதனை வலியுறுத்தி வருகின்றன.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூட, தாம் ஜனாதிபதியாகப் பதவியேற்ற கையோடு, "மக்கள் தமது உறவுகளை நினைவுகூர உரிமை உண்டு. அது மறுக்கப்பட முடியாதது" என்று கூறினார். பின்னரும் அதை அவர் பல தடவைகள் வலியுறுத்தி வந்தார்.

ஆனால் அவையெல்லாம் பேச்சளவில்தான் இருக்கின்றன. அவரின் பொலிஸ் கட்டமைப்பு அதற்கு எதிராக – மிக முரட்டுத்தனமாக – தமிழ் மக்களின் ஆன்மாவையே சீண்டிப் பார்க்கும் விதமாக – அடக்குமுறைத் திமிருடன் – இப்படி நடந்து கொள்கின்றது.

இன்னொரு கோட்டாபய ராஜபஷவின் அராஜக ஆட்சியையே இந்தச் செயற்பாடு மூலம் ரணில் விக்கிரமசிங்கவும் இங்கு நிலைநிறுத்த முயலுகின்றாரோ என்ற சந்தேகம் நமக்கு எழுகின்றது. இந்தப் போக்கு அவருக்கும் நல்லதல்ல, இலங்கை நாட்டுக்கும் நல்லதல்ல.

"வினையை விதைத்தால் அதைத்தான் அறுவடை செய்ய வேண்டி இருக்கும்" என்பதை ஜனாதிபதிக்கும் அவரது பொலிஸ் துறைக்கும் நினைவுபடுத்த விரும்புகின்றோம்.

நினைவேந்தல் விடயத்தில் மக்களின் உரிமையை அராஜகம் மூலம் அடக்குவது மக்களை அதற்கு எதிராகக் கிளர்ந்தெழ வைக்கும் விபரீதத்தையே ஏற்படுத்தும். இதையும் ஆட்சிப்பீடத்துக்கு நாங்கள் நினைவூட்ட விரும்புகின்றோம்." – என்றார்.

# அமைதி, சமாதானத்துக்கான வாய்ப்பை அடியோடு குலைக்கும் அராஜகப் போக்கு

## பொலிஸ் நடவடிக்கையை வைகின்றார் சித்தர்



**"படுகொலையுண்ட தமது உறவுகளை நினைவேந்தும் நமது மக்களின் உரிமையை அடக்குமுறைச் சட்டங்களை ஏவி மறுப்பது நாட்டில் அமைதி, சமாதானத்துக்கான வாய்ப்பை அடியோடு குலைத்து விடும். இவ்விடயத்தை நிதானத்தோடும், நீதி - நியாயத்தோடும், தார்மீகத்தோடும் அனுகும்படி தனது பொலிஸ் கட்டமைப்புக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இறுக்கமாகப் பணிப்புரை கொடுத்து வழிநடத்த வேண்டும்.அதில்அவர்தவறுவாரேயானால்முன்னரும்சிலதடவைகள்தமிழர்களிடம் அரசியல் பாடம் படித்த கசப்பான அனுபவம் போன்ற ஒரு பட்டறிவை திரும்பவும் அவர் பெற வேண்டிய துர்ப்பாக்கியம் நேர்ந்தாலும் நேர்ந்து விடும்."**

**- இவ்வாறு புளொட் அமைப்பின் தலைவரும் யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்தார்.**

முள்ளிவாய்க்கால் நினைவேந்தலையொட்டி முள்ளிவாய்க்கால் கஞ்சி விநியோகித்தவர்கள் சம்பூரில் ஈவிரக்கமற்ற முறையில் இரவு வேளையில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டமையையொட்டி கருத்து வெளியிட்டபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

"தமிழ் மக்களின் நினைவேந்தும் உரிமை மறுக்கப்படக் கூடாது என்பதை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே பல தடவைகள் வலியுறுத்திக் கூறி வந்திருக்கின்றார். அப்படி இருக்க அவரது பொலிஸ் துறை அதற்கு முற்றிலும் மாறாகவே இப்போது நடக்கின்றது.

இதனை நோக்கும்போது நமக்கு ஒரு சந்தேகம் ஏற்படுகின்றது. ஒன்றில் – பொலிஸ் துறை ஜனாதிபதியின் கட்டுப்பாட்டில் இல்லை, தமது கொள்கை – கோட்பாட்டை தமது பொலிஸ் துறை மூலம் செயற்படுத்தச் செய்யும் நிர்வாக அதிகார வலிமை அவரிடம் இல்லாமல் இருக்கலாம். அல்லது அவரும் இரட்டை வேடம் போட்டுத் தமிழரிடம் கூறுவது ஒன்று, தனது சிங்களவர்கள் மூலம் செய்விப்பது வேறு என்று இருக்கலாம்.

எது, எப்படியாயினும் இந்தப் போக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அரசியலுக்கு நல்லதல்ல.

இத்தகைய அடக்குமுறைக்கு எதிராப் போராடிப் பழக்கப் பட்டவர்கள் நமது தமிழ் மக்கள். நாங்கள் அடங்கோம். நினைவேந்தல் உரிமைகளுக்காகவும் அடங்காமல் போராடுவோம் என்ற செய்தியை ஜனாதிபதிக்கு கூறி வைக்க விரும்புகின்றேன்." – என்றார்.

# அரச வர்த்தமானி அறிவிப்புக்கு அமைவாக கம்பனிகள் செயற்பட வேண்டியது அவசியம்

## அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவிப்பு



**பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்பு குறித்து அரசாங்கம் விடுத்துள்ள வர்த்தமானி அறிவித்தலுக்கு அமைய பெருந்தோட்ட கம்பனிகள் செயற்பட வேண்டியது அவசியம். அதற்கு எதிராக கம்பெனிகள் மேற்கொள்ளும் நீதிமன்ற நடவடிக்கைளுக்கு முகம்கொடுக்கத் தயார்.”**

**– இவ்வாறு நீர் வழங்கல் மற்றும் பெருந்தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.**

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

“தற்பொழுது நடைமுறைப்படுத்தப்படும் நாள் சம்பள முறைமை பொருத்தமற்றதாகும். அந்த முறைமையில் இருந்து மாற வேண்டியது அவசியம். அதற்காக நான் கைந்து வருடங்கள் அவசியப்படும். அதற்காக தோட்ட தொழிலாளர்களை 1,000 ரூபா சம்பளத்துடன் காத்திருக்க வைப்பதை ஏற்றுகொள்ள முடியாது.

தேர்தல் காலத்தில் ஒவ்வொரு கட்சியும் ஒவ்வொரு தொகையை பெற்றுத்தருவதாக கூறும். எதிர்கட்சிகள் தோட்ட மக்களை சிறுதோட்ட உரிமையாளர்களாக மாற்றுவதாக கூறினாலும் அதற்காக பொறிமுறை என்னவென்பது கேள்விக்குரியாகும்.

ஆரம்பத்தில் பெருந்தோட்ட தொழிலாளர்களின் அடிப்படைச் சம்பளத்தில் ஒரு ரூபா கூட அதிகரிக்க முடியாதென கூறிய கம்பனிகள், அரசாங்கம் 1700 சம்பள அதிகரிப்புக்கான வர்த்தமானி அறிவித்தலை விடுத்த பின்பு அடிப்படைச் சம்ளத்தில் 200 ரூபாவை அதிகரிக்க முன்வந்துள்ளனர். அதனால் சம்பள அதிகரிப்பை செய்ய முடியும் என்று கம்பெனிகள் காண்பித்துள்ளன.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, கொட்டகலை மே தினக் கூட்டத்தில் பெருந்தோட்ட தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்பு குறித்து அறிவித்தார். ஏப்ரல் 30ஆம் திகதி பெருந்தோட்ட மக்களுக்கு 1,700 ரூபா சம்பள அதிகரிப்பை வழங்குவது தொடர்பான வர்த்தமானி அறிவிப்பு தொழில் அமைச்சர் மனுஷ நாணாயக்காரவினால் வெளியிடப்பட்டது. இது குறித்து சிலர் மக்கள் மத்தியில் சர்ச்சைகளை ஏற்படுத்தி வதந்திகள் பரப்பினர். ஜனாதிபதி இந்த அறிவிப்பை விடுத்த மறு தினமே அது நடக்காது என்றும் கூறினார்கள்.

இதே பெருந்தோட்ட நிறுவனங்கள் 1,000 ரூபா சம்பள அதிகரிப்பை வழங்க முடியாதென கூறினார்கள். அதற்கு எதிராக தொடரப்பட்ட வழக்கிலும் இரண்டு தடவைகள் வெற்றி பெற்றிருக்கிறோம். தற்போது மேன்முறையீடு செய்துள்ளனர். குறித்த வழக்கு ஏற்கனவே உள்ள சம்பள நிர்ணய சபை மீதே தொடரப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் மேற்கொள்ளப்போகும் சம்பள விடயத்தில் நிர்ணயச் சபைக்கு தொடர்பில்லை. 1,000 ரூபாவுக்கு மேலதிகமாக ஒரு ரூபாவும் கொடுக்க முடியாது என்று கூறிய பெருந்தோட்ட நிறுவனங்கள் 1700 சம்பள அதிகரிப்புக்கான வர்த்தமானி அறிவிப்பு வெளியிடப்பட்ட பின்பு 1,200 ரூபாவாக அடிப்படை சம்பளத்தை உயர்த்த முன்வந்துள்ளனர்.

ஒரு ரூபா கூட அதிகரிக்க முடியாது என்று கூறியவர்கள் அடிப்படைச் சம்பளத்தில் 200 ரூபாவை அதிகரிக்க விருப்பம் தெரிவித்துள்ளனர். வழக்கு இடம்பெறுவதால் சம்பள உயர்வு வழங்க முடியாது என்று சட்டம் இல்லை. அது குறித்த எழுத்து மூல அறிவிப்பு சட்டமா அதிபரினால் தொழில் அமைச்சுக்கு அனுப்பட்டிருக்கிறது. பெருந்தோட்ட நிறுவனங்கள் இந்த விடயத்தை இழுபறியாக்கவே பார்க்கின்றார்கள். இது குறித்து ஜனாதிபதியிடமும் பேசியிருக்கின்றோம்.

அதன்படி ஜனாதிபதியின் வழிகாட்டலின் கீழ் தொழில் அமைச்சரால் இது குறித் ஆவணமொன்று தயாரிக்கப்படுகிறது. பெருந்தோட்ட நிறுவனங்கள் எந்தெந்த இடத்தில் எல்லாம் சட்டத்தை மீறியிருக்கின்றன? எந்தெந்த இடத்தில் எல்லாம் அவர்கள் இலக்கு இல்லாமல் வேலை செய்திருக்கின்றார்கள்? மீள் நடுகை செய்யாமலிருப்பதற்கான காரணம் என்ன? – என்பன உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் இதன்போது ஆராயப்படும்.

இவ்வாறிருக்க பெருந்தோட்ட கம்பனிகள் குத்தகை காலத்தை நீட்டித்து தாருமாறு கேட்கிறார்கள். மீள் நடுகைச் செய்தால் இலாபமீட்ட 60 வருடங்கள் ஆகும் என்று கூறுகிறார்கள். 53 வருடங்கள் குத்தகைக்கு காணிகளை பெற்றுக்கொண்டபோது அவர்களுக்கு அது விளங்கவில்லையா என்பது கேள்விக்குறியாகும். அதனால், தற்போது சம்பளத்தை அதிகரிக்க முடியாது என்று கூறுவது நியாயமற்றது. பராமரிப்பு இன்மையினாலேயே தோட்டங்கள் காடாக மாறியுள்ளன.

தோட்டத் தொழிலாளர்கள் தொழில் செய்யும் இடத்தில் கௌரவமாக நடத்தப்படுத்துவதில்லை. அதுவே தொழிலாளர்கள் எண்ணிக்கை குறையக் காரணமாகும். அவர்களுக்கு உரிய அங்கீகாரம் கிடைப்பதில்லை. தேயிலைத் தோட்டத்தில் தேயிலை மாத்திரம்தான் இருக்கும் என்ற நிலை இன்று மாறிவிட்டது. பங்களாக்கள் சுற்றுலா இடங்களாக மாற்றப்பட்டுள்ளன. அதிலும் நாளாந்தம் 1,000 – 2,000 டொலர் ஈட்டுகின்றனர். அங்கு தேநீர் நிலையங்களும் அமைக்கப்பட்டுள்ளன. இவ்வாறு இரு முனைகளில் வருமானம் ஈட்டினாலும் கம்பனிகள் அரசாங்கத்திற்கு வெறும் 500 ரூபாவை மாத்திரமே வழங்குகின்றனர்.

தங்களாலேயே சுற்றுலாத்துறை ஊக்குவிக்கப்படுவதாகக் கூறிக்கொள்கிறார்கள். இது பெருந்தோட்ட நிறுவனங்களின் சூழ்ச்சியாகும். அதனாலேயே ஜனாதிபதியும் தொழில் அமைச்சரும் எமது கோரிக்கையை ஏற்றுக்கொண்டுள்ளனர்.

கடந்த 4 வருடங்களாக பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வு கிடைக்கிவில்லை. கூட்டு ஒப்பந்தம் இருக்கும்போது இரண்டு வருடத்திற்கு ஒரு முறை சம்பள உயர்வு கிடைத்தது. டொலரின் பெறுமதி வீழ்ச்சி கண்டதன் மூலம் பெருந்தோட்ட கம்பனிகள் அதிக இலாபம் ஈட்டியுள்ளன. அதனால் நிச்சயமாக தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வு வழங்க முடியும்.

மேலும், தற்போது யாழ். குடாநாட்டில் சுத்தமான குடிதண்ணீர் 11 வீதமானோருக்கு மாத்திரமே கிடைக்கிறது. தற்போது நிர்மாணிக்கப்பட்டு வரும் உப்புநீர் சுத்திகரிப்பு நிலையம் திறக்கப்பட்ட பின்னர் யாழ். குடாநாட்டில் 40 வீதமானோருக்கு சுத்தமான குடிதண்ணீர் கிடைக்கும்.” – என்றார்.



# உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிக்காகப் புறப்படும் இலங்கை கிரிக்கெட் அணிக்கு ஜனாதிபதி வாழ்த்து

அமெரிக்கா மற்றும் மேற்கிந்தியத் தீவுகளில் ஜுன் முதலாம் திகதி முதல் ஜ/ன் 29 ஆம் திகதி வரை நடைபெறவுள்ள இருபதுக்கு 20 உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியில் பங்குபற்றுவதற்காக நாட்டிலிருந்து புறப்பட்டுச் செல்லும் இலங்கை கிரிக்கெட் அணியினர் நேற்று பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்தனர்.

வனிது ஹசரங்க தலைமையிலான 15 வீரர்கள் அடங்கிய இலங்கை கிரிக்கெட் அணி இன்று காலை நாட்டிலிருந்து புறப்படவுள்ளது.

வீரர்களை ஊக்குவித்த ஜனாதிபதி, அவர்களுடன் சிநேகபூர்வமாக கலந்துரையாடினார். நாட்டிற்கு சிறந்த வெற்றியுடன் வருங்கள் எனவும் அவர்களை வாழ்த்தினார்.

இதேவேளை, இலங்கையில் நடைபெற்ற முதலாவது பிரிவு ஆசிய ரக்பி சம்பியன்ஷிப் போட்டியில் வெற்றி பெற்ற இலங்கை ரக்பி அணியும் நேற்று பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்தது.

பல வருடங்களின் பின்னர் ரக்பி விளையாட்டில் கிடைத்துள்ள இந்த வெற்றியையிட்டு நாடு மிகவும் பெருமையடைவதாக தெரிவித்த ஜனாதிபதி, வீரர்களின் திறமைகளை பாராட்டி அவர்களை வாழ்த்தினார்.

இந்த நிகழ்வில் சுற்றுலாத்துறை, காணி, விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ, இராஜாங்க அமைச்சர் அருந்திக பெர்னாண்டோ, தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க ஆகியோரும் கலந்துகொண்டனர்.
















INDSRI FERRY

# தாமதத்திற்கு வருந்துகின்றோம்

தவிர்க்கமுடியாத சில சட்டரீதியான அனுமதிகள் காரணமாகவும், தாமதமான கப்பலின் வருகையினாலும் எமது திட்டமிட்ட நாகை – காங்கேசன் – நாகை பயணிகள் கப்பல் சேவையினை 13/05/2024 முதல் 16/05/2024 இயக்கமுடியவில்லை. சேவையினை 17/05/2024 இல் இருந்து இயக்குவதற்கு முழு ஒத்துழைப்பு வழங்குவதாக அதிகாரிகள் உறுதியளித்துள்ளனர். 13/05/2024 முதல் 16/05/2024 பதிவு செய்த பயணிகளை 17/05/2024 சேவைக்கு மாற்றியுள்ளோம்.

பதிவு செய்த பயணிகள் 17/05/2024 அன்று அல்லது அதற்குப் பின்னர் அவர்கள் விரும்பிய திகதிகளில் பயணிக்கலாம் அல்லது செலுத்திய கட்டணத்தினை முழுமையாக மீளப்பெற விரும்பினால், customer.care@sailindsri.com என்ற மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். செலுத்திய கட்டணத்தினை பெற்றுக்கொள்ளலாம்.



## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வழக்கு, நீதிமன்றம், விசாரணை என்று வந்தால் பல டசின் தலைவர்கள் சம்பந்தப்பட வேண்டிய கட்சி.

ஆனால் ஓரிருவருக்கு எதிராக, ஓரிருவர் வழக்கு வைக்கின்றனர். தடை உத்தரவுகள் – மன்னிக்கவும் இடைக்கால தடை உத்தரவுகள் – பறக்கின்றன. கட்சியே முடங்கும் நிலைமை. அதிலும் ஒரு விநோதம் உண்டு. அனேகமாக மாறி மாறி விதிக்கப்பட்ட எல்லா இடைக்காலத் தடை உத்தரவுகளும் தனி மனுதாரர்கள் தரப்பு வாதத்தை ஒருதலைப் பட்சமாக கேட்டு வழங்கப்பட்ட Ex parte உத்தரவுகள்தான்.

முதலில் மைத்திரிபால சிறிசேன தலைவராக நீடிப்பதற்கு எதிராக இடைக்காலத் தடை உத்தரவு ஒன்றை சந்திரிகா கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் ஒருதலைப் பட்சமாக வாதாடிப் பெற்றார்.

பிறகு ஓர் அணி அதே கொழும்பு மாவட்ட நீதிமன்றத்திற்கு சென்று கட்சியின் பதில் தலைவராக நியமிக்கப்பட்ட விஜயதாஸ ராஜபக்ஷவுக்கு எதிராக இடைக்காலத் தடை உத்தரவு ஒன்றைப் பெற்றுக் கொண்டது.

அதேசமயம், அதுவரை கட்சியின் பதில் பொதுச்செயலாளராக இருந்த துஷ்மந்த மித்திரபாலவுக்கும் ஓர் இடைக்காலத் தடை உத்தரவு இதே பாணியில் பெறப்பட்டது.

இந்த இரண்டு இடைக்கால தடைகளும் கூட ஒரே தரப்பினால் ஒரு தலைப் பட்சமாகவே வாதாடிப் பெறப்பட்டது.

ஆக, மைத்திரி தரப்பில் கட்சியின் தலைவராக இருந்த மைத்திரிபால சிறிசேன, பதில் தலைவராகத் தெரிவான விஜயதாஸ ராஜபக்ஷ, பதில் பொதுச் செயலாளராகப் பணியாற்றிக் கொண்டிருந்த துஷ்மந்த மித்திரபால ஆகிய மூவருக்கு எதிராகவும், அந்தந்தப் பதவிகளில் அவர்கள் செயல்பட முடியாதபடி நீதிமன்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அந்த உத்தரவுகள் இருக்கத்தக்கதாக அந்தத் தரப்பு கட்சியின் செயற்குழுவைக் கூட்டியதாகக் கூறப்படுகிறது.

மூவருக்கும் நீதிமன்றம் இடைக்காலத் தடை உத்தரவு விதித்திருக்கையில் கட்சியின் செயற்குழுவை கூட்டியவர் யார், யாருக்கு அந்த அதிகாரம் உண்டு என்பவை எல்லாம் எவருக்கும் தெரியாத சட்ட இரகசியங்கள் போலும்.

பதில் தலைவராகக் கூடச் செயல்படக் கூடாது எனக் கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தினால் தடை உத்தரவு விதிக்கப்பட்டவர், அந்த சர்ச்சைக்குரிய செயற்குழு கூட்டத்தில் கட்சியின் புதிய தலைவராகத் தெரிவு செய்யப்படுகின்றார்.

இதில் இன்னொரு வேடிக்கையும் உண்டு. அப்படி கட்சியின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட விஜயதாஸ ராஜபக்ஷ நாட்டின் நீதி அமைச்சர். அவர் மீண்டும் தான் புகுந்த சு.கவில் உடனடியாக தலைவராகத் தேர்வு செய்யப்பட்டதும் அவர் சார்பிலும் நீதிமன்றத்திற்கு போயிருக்கின்றார்கள். அவர்கள் போனது கொழும்பு மாவட்ட நீதிமன்றம் அல்ல. அங்கு கட்சி தொடர்பில் விஜயதாஸ ராஜபக்ஷவின் வண்டவாளம் தண்டவாளத்தில் ஏறி ஓடிக் கொண்டிருப்பதால், அருகில் உள்ள கடுவெலே மாவட்ட நீதிமன்றத்திற்கு அவர்கள் போயிருக்கிறார்கள். அங்கு விஜயதாஸ ராஜபக்ஷவுக்கு ஆதரவாக ஒரு இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

விஜயதாஸ ராஜபக்ஷ சுதந்திரக் கட்சியின் தலைவராகச் செயற்படுவதை யாரும் தடுக்க கூடாது என்று ஒரு தரப்பு வாதத்தினுடைய விசாரணையின் பின் அந்த நீதிமன்றம் இடைக்கால உத்தரவு வழங்கி இருக்கிறது.

ஆக, ஒரு நீதிமன்றம் – கொழும்பு மாவட்ட நீதிமன்றம்– விஜயதாஸ ராஜபக்ஷ சு.கவின் பதில் தலைவராக கூடப் பதவி வகிப்பதற்கு இடைக்கால தடை விதிக்கின்றது. மற்றொரு நீதிமன்றம் – கடுவெல நீதிமன்றம் – விஜயதாஸ ராஜபக்ஷ கட்சியின் புதிய தலைவராக செயல்படுவதற்கு யாரும் தடை விதிக்க கூடாது என்று உத்தரவிடுகின்றது.

இப்படி எதிரும் புதிருமான நீதிமன்ற உத்தரவுகள் குறித்து கொழும்பில் ஒரு பழைய சட்டத்தரணி நண்பரிடம் கேட்டேன். அவர் சிரித்தார்.

"நல்ல காலம், உங்கள் தமிழரசுக் கட்சியிலும் பல சட்ட ஜாம்பவான்கள் இருக்கிறார்கள். மாறி, மாறி பல நீதிமன்றங்களுக்கு போய் அலைய வைக்கவில்லை; அல்லாட வைக்கவில்லை. யாழ். நீதிமன்ற விடயம் சின்ன விவகாரம். விட்டு விடுங்கள். திருகோணமலை நீதிமன்றத்துடன் மட்டுப்படுத்திக் கொண்டார்கள் என்று மகிழுங்கள். இழுத்த பக்கம் எல்லாம் இழுபடும் சட்ட முறைமையும், நீதிமன்றங்களும் இருக்கும் வரை இதெல்லாம் – சு.க. வழக்கு போன்றவை எல்லாம் – சகஜமப்பா!" – என்றார் அவர்.

## நினைவேந்தலைத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நீதிமன்றங்களின் சுயாதீனம் பறிக்கப்பட்டுள்ளதா?" – என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச்செயலாளர் செல்வராசா கஜேந்திரன் எம்.பி. கேள்வி எழுப்பினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற நிதிக் கட்டளைகள் தொடர்பான விவாதத்தில் உரையாற்றும்போதே இவ்வாறு கேள்வி எழுப்பிய அவர், மேலும் பேசுகையில்,

"எமது தேசத்தின் மீதான ஒடுக்குமுறைகள் எல்லை கடந்து செல்கின்றன. எமது தேசத்தின் மீது இலங்கை அரசு இனப்படுகொலையை அரங்கேற்றி 15 ஆண்டுகள் கடந்துள்ளன. ஆனால், இன்றுவரை படுகொலை செய்யப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்கவில்லை. இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்ட மற்றும் கருணா, பிள்ளையான், ஈ.பி.டி.பி.யினரால் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டவர்களைத் தேடி அவர்களின் உறவுகள் இன்றும் அலைந்து கொண்டிருக்கின்றனர்.

இவ்வாறான நிலையில் மே 18 ஆம் திகதியை முன்னிட்டு எங்கள் மீது நடத்தப்பட்ட இனப்படுகொலையை நினைவு கூர்ந்து அதற்கான நீதியைக் கோரும் விதமாக வடக்கு, கிழக்கில் வாழும் தமிழ் மக்கள் இந்த இனப்படுகொலை வாரத்தை அனுஷ்டிக்கின்றனர். அந்த இனப்படுகொலை நடந்த 2009 ஆம் ஆண்டில் உணவை ஆயுதமாகப் பயன்படுத்திய கோட்டாபய ராஜபக்ஷவும் அவரது அண்ணன் மஹிந்த ராஜபக்ஷவும் தமிழ் மக்களைப் பட்டினிச் சாவுக்குள் தள்ளிய போது தமிழ் மக்கள் கஞ்சி குடித்து உயிர்பிழைத்த வரலாறு உள்ளது.

இதனை நினைவுகூரும் விதமாக மக்களுக்குக் கஞ்சி கொடுக்கும் நிகழ்வை இந்த வாரம் நாம் அனுஷ்டிப்பது வழமை. அந்தவகையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை திருகோணமலையில் ஆலயமொன்றில் கஞ்சி கொடுக்கும் நிகழ்வு நடைபெற்ற போது அந்த நிகழ்வில் ஈடுபட்டமைக்காக எமது கட்சியின் திருகோணமலை மாவட்ட உதவிச் செயலாளர் ஹரிஹரகுமார் மற்றும் 3 பெண்கள் கைது செய்யப்பட்டு மூதூர் நீதிவான் நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டு 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்கள்.

இதுதான் இந்த நாட்டின் நல்லிணக்கம், மற்றைய இனங்களை, மதங்களை மதிக்கும் பண்பு. ஆலயத்தில் கஞ்சி காய்ச்சப்பட்டமைக்காக இந்தத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது என்பது மிகவும் வேதனைக்குரியது. அவர்கள் 4 பேரும் உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டும்.

வடக்கு, கிழக்கில் நீதிமன்றங்கள் இனவாதப் பொலிஸாரின் கட்டளைகளுக்குப் பணிந்து செயற்படுகின்றனவா என்ற கேள்வி எழுந்துள்ளது. பொலிஸார் நீதிமன்றங்களுக்குச் சென்று எதனைச் சொன்னாலும் அதனை அப்படியே நீதிமன்றங்கள் ஏற்றுக்கொண்டு செயற்பட வேண்டிய நிலைக்கு நீதிமன்றங்களின் சுயாதீனம் பறிக்கப்பட்டுள்ளதா?

ஞாயிற்றுக்கிழமை நீதிமன்றம் வழங்கிய உத்தரவில், பொதுமக்களை ஒன்று கூட்டுவதும் அவர்களுக்கு உணவு, கஞ்சி பரிமாறுவதும் சுகாதாரச் சீர்கேட்டை ஏற்படுத்தும் எனக் கூறி பொலிஸார் கோரிய தடை உத்தரவுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அப்படியெனில் எதிர்வரும் வெசாக் தினங்களில் "தன்சல்" உணவு வழங்கும் செயற்பாடுகளைச் சுகாதாரச் சீர்கேட்டைக் காரணம் காட்டி தடுத்து நிறுத்துமாறு பொலிஸார் நீதிமன்றங்களைக் கோருவார்களா? அதனை ஏற்று நீதிமன்றங்கள் தடை உத்தரவு வழங்குமா? அவ்வாறான உணவு வழங்கலைத் தடுத்து நிறுத்த உங்களால் முடியுமா? தமிழர்களுக்கு ஒரு நீதி, சிங்களவர்களுக்கு ஒரு நீதியா? இந்த இனவாதச் செயற்பாடுகளை உடனடியாக நிறுத்த வேண்டும்.

பொலிஸாரின் அத்துமீறல்கள் எல்லை தாண்டிச் சென்றுகொண்டிருக்கின்றன. கடந்த 10 ஆம் திகதி யாழ்ப்பாணத்திலே இரண்டு பொலிஸார், மோட்டார் சைக்கிளில் பயணித்த ஒருவரை துரத்திச் சென்று உதைந்து வீழ்த்தியமையால் அவர் மின்கம்பத்துடன் மோதி உயிரிழந்திருக்கின்றார். இந்த இரு பொலிஸாரும் உடனடியாகக் கைதுசெய்யப்படவேண்டும். பொலிஸாரின் அராஜகங்கள் கட்டுப்படுத்தப்பட வேண்டும்." – என்றார்.

## மக்களின் நினைவேந்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வெளியிட்டிருக்கின்றார்.

அதில் அவர் தெரிவித்திருப்பவை வருமாறு:–

"இரவில் ஆண் பொலிஸாரால் அநாகரிகமான முறையில் பெண்கள் கைது செய்யப்படுகின்றார்கள். நம் நாடு எங்கே போகின்றது?

2009ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆம் திகதி இறந்தவர்களின் நினைவாக கஞ்சி வழங்கிய சில பெண்கள் பொலிஸாரால் வலுக்கட்டாயமாக – முரட்டுத்தனமாகக் கைது செய்யப்பட்டு அவர்களது வீடுகளில் இருந்து அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கஞ்சி வழங்குவது ஆரோக்கியமற்றது என நீதிமன்றத்தில் பொலிஸார் உத்தரவு பெற்று, அவ்வாறு விநியோகிக்கத் தடை உத்தரவு வாங்கியுள்ளனர் எனத் தெரிகின்றது. அப்படியானால், பொதுச் சுகாதார அதிகாரி மூலம் அல்லவா அந்த உத்தரவைப் பெற்றிருக்க வேண்டும்? பொலிஸ் எதற்கு?

அம்பிகா சற்குணநாதன் அம்மையார் கேட்டது போல், மே தினத்தை ஒட்டியோ அல்லது வெசாக் தான தினத்திலோ பொலிஸார் அத்தகைய தடை உத்தரவுகளைப் பெறுவார்களா?

2009ஆம் ஆண்டு மே 18 ஆம் திகதியை ஒட்டிய காலத்தில் இலங்கை இனவாத அரசினால் ஒப்பேற்றப்பட்ட இனப்படுகொலையை மூடிமறைக்கும் அப்பட்டமான முயற்சியே இது.

இத்தகைய தேவையற்ற, கபடத்தனமான மூடிமறைப்புச் செயல்களை இலங்கை நாடும், அதன் அரசும் எந்தளவுக்கு மேற்கொள்கின்றனவோ, அவ்வளவுக்கு அதிகமாக, இறந்தவர்களை நினைவு கூர்ந்து, சுயநிர்ணய உரிமைக்கான போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வதில் நமது மக்கள் மிகவும் உறுதியாக இருப்பார்கள்.

கைதானவர்களுக்கு எதிரான அறிக்கைகளைத் திரும்பப் பெற்று, நெருக்கடியில் இருக்கும் அந்தப் பெண்கள் உட்பட அனைவரையும் விடுவிப்பதற்கான உத்தரவை ஜனாதிபதி வழங்குவார் என்று நம்புகின்றேன்.

2009 ஆம் ஆண்டு மே 18ஆம் திகதியை எனது தமிழ்ச் சகோதரர்கள் கூடுதலான உற்சாகத்துடனும் உறுதியுடனும் நினைவுகூர்வார்கள்." – என்றுள்ளது.

## நினைவேந்தலைத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

யாழ். வடமராட்சி ஊடக இல்லத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே எம்.ஏ. சுமந்திரன் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

"திருகோணமலையில் முள்ளிவாய்க்கால் கஞ்சி காய்ச்சும் நினைவேந்தல் நிகழ்வைப் பொலிஸார் நீதிமன்றக் கட்டளை ஊடகத் தடுத்துள்ளனர் என்று அறியமுடிகின்றது.

நினைவேந்தல்கள் உலக நியமங்களிலே மிக முக்கியமானவை. ஆகவே, இதனைத் தடுக்கின்றவர்கள் மிக மோசமான செயல்களிலே ஈடுபடுகின்றார்கள். ஜனாதிபதி ரணிலுக்கு ஒரு செய்தியைச் சொல்லுகின்றோம். அதாவது உங்களது கட்டளையின் பெயரிலே அல்லது உங்கள் அமைச்சர்களின் கட்டளையின் பெயரிலே நினைவேந்தல் நிகழ்வுகளைத் தடுக்கின்ற நடவடிக்கைகள் எடுக்கப்படுமாக இருந்தால் வரப் போகும் ஜனாதிபதித் தேர்தலில் எமது மக்களிடம் வாக்குகளைக் கேட்டு வரவேண்டாம். மற்றைய தலைவர்களிடத்திலேயும் நாங்கள் இதனைச் சொல்ல விரும்புகின்றோம்.

எமது மக்கள் தமக்கு நிகழ்ந்தவற்றை அனுஷ்டிப்பதை அங்கீகரிக்கவில்லை என்றால் இங்கே எமது மக்களின் வாக்குகளைக் கேட்டு வரவேண்டாம் என்பதையும் நாங்கள் சொல்லி வைக்க விரும்புகின்றோம்.

இது ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்தப் போகின்றோம் என்று கூறுபவர்களுக்கு ஆதரவாகக் கூறும் செய்தியல்ல. அது வேறு விடயம். அது சம்பந்தமாக எமது கட்சி (இலங்கைத் தமிழரசுக் கட்சி) எதிர்வரும் 19ஆம் திகதி கூடி சரியாக ஆராய்ந்து ஒரு தீர்மானத்தை எடுக்கும்.

ஆகவே, அது சம்பந்தமான வேறு விடயங்களை நான் தெரிவிக்க விரும்பவில்லை. ஏற்கனவே எமது கட்சியின் பெருந்தலைவர் (இரா.சம்பந்தன்) தமிழ்ப் பொது வேட்பாளர் விடயத்தில் அவசரப்பட்டு ஒரு முடிவை எடுத்துவிட வேண்டாம் என்றும் அறிவித்திருக்கின்றார். அதற்கு முன்னரும் தமிழ்ப் பொது வேட்பாளர் ஒரு பொருத்தமற்ற நடவடிக்கை என்று எமது கட்சியின் பெருந்தலைவர் அறிவித்திருக்கின்றார். நாங்கள் அவருடைய கருத்தையும் ஏனையோருடைய கருத்தையும் சீராக ஆராய்ந்து பொருத்தமான முடிவுக்கு வருவோம்." – என்றார்.

கேள்வி:–ஜனாதிபதித்தேர்தலில்தமிழ்ப் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவது தொடர்பில் வடக்கு, கிழக்கில் பொது அமைப்புக்கள், அரசியல் கட்சிகள் கலந்துரையாடி வருகின்றன. இதற்கான பொது வேட்பாளராக எம்.ஏ. சுமந்திரனை நிறுத்தலாம் என்று பேச்சு எழுந்துள்ளது. அது உண்மையா? உங்களிடம் இது பற்றி கேட்கப்பட்டதா?

பதில்:–"ஆம். உத்தியோகபூர்வமாக அனைவரும் இணைந்து வந்து கோரிக்கையை முன்வைக்கவில்லை. ஆனால், இந்தப் பேச்சு எழுந்த வேளையிலே சுரேஷ் பிரேமச்சந்திரன் என்னிடம் ஒரு தடவை கேட்டிருந்தார்.

தமிழ்ப் பொது வேட்பாளருக்குப் பொருத்தமானவர் நீங்கள்தான் என்றும், ஒரு சிலரால் இது குறித்து பகிரப்பட்டது என்றும், அது குறித்து எனது நிலைப்பாடு என்ன என்றும் என்னிடம் சுரேஷ் பிரேமச்சந்திரன் கேட்டிருந்தார். நான் அப்போதே எனது நிலைப்பாட்டைச் சொல்லியிருந்தேன்.

அப்படியாகத் தமிழ் பொது வேட்பாளராக நான் ஜனாதிபதித் தேர்தலிலே போட்டியிடமாட்டேன். ஜனாதிபதியாக வருவதற்கு ஜனாதிபதி வேட்பாளராக, ஜனாதிபதி பொது வேட்பாளராக, ஜனாதிபதி எதிரணி வேட்பாளராக என்னைக் களமிறங்கச் சொன்னால் அது வேறு விடயம்.

இந்த நாட்டிலே எந்தச் சமூகத்தவரும், எந்தச் சமயத்தவரும், எந்த மொழியைப் பேசுபவர்களும் ஜனாதிபதியாக வர முடியும். அதற்குப் போட்டியிட முடியும். ஆகையினாலே அப்படியான சூழ்நிலையிலே நான் மட்டுமல்ல வேறு யாராவதும் போட்டியிட அழைக்கப்பட்டால் ஆராய்ந்து பார்க்க வேண்டும் என்பதுதான் எனது நிலைப்பாடு.

ஆனால், தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளை வெளிப்படுத்துவதற்கு, ஜனாதிபதித் தேர்தலிலே ஒரு தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்தி அந்த அபிலாஷைகளை வெளிப்படுத்த வேண்டும் என்ற கருத்துக்கும் எனக்கும் இணக்கம் இல்லை." – என்றார்.

## மீண்டும் பொலிஸ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்த அவர், தொடர்ந்தும் பேசுகையில்,

"இன்றைய நாட்கள் தமிழர்களின் வாழ்வில் மிக முக்கியமான நாட்கள் .15 வருடங்களுக்கு முன்னர் தமிழர்கள் கொத்துக்கொத்தாகக் கொல்லப்பட்ட, பூண்டோடு அழிக்கப்பட்ட, பாதுகாப்பு வலயம் என அரசால் அறிவிக்கப்பட்டு அந்தப் பாதுகாப்பு வலயத்துக்குள் நம்பிச் சென்ற மக்கள் கொத்துக்குண்டுகளாலும் பொஸ்பரஸ் குண்டுகளாலும் வகைதொகையின்றிக் கொல்லப்பட்ட நாட்கள். குழந்தைகள், கர்ப்பிணிகள், வயோதிபர்கள் உட்பட பல்லாயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டார்கள்.

மன்னார் மறைமாவட்ட ஆயராக இருந்த வணக்கத்துக்குரிய இராயப்பு ஜோசப் நல்லிணக்க ஆணைக்குழு முன்பாக இறுதிப் போரில் ஒரு இலட்சத்து 46 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டும் காணாமல்போயுமிருப்பதாக முழுமையான துல்லியமான, நம்பகமான ஆவணத்தைச் சமர்ப்பித்திருந்தார். அந்த ஆவணம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழுவாலும் உலக நாடுகளாலும் ஒரு முக்கிய கருவியாகக் கொள்ளப்படுகின்றது.

இவ்வளவு மக்கள் கொல்லப்பட்டும் இந்த நாட்டில் எந்தவொரு திராணியுள்ள, தைரியமுள்ள சிங்களத் தலைவரும் தமிழ் மக்களிடம் மன்னிப்புக் கேட்கவும் இல்லை. ஆறுதல் சொல்லவும் இல்லை.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் பேசுகின்றார்கள். ஆனால், தமிழ் மக்கள் இன அழிப்பு செய்யப்பட்ட நினைவு வாரம் தற்போது ஆரம்பமாகியுள்ளது. திருகோணமலை மாவட்டத்தில் சீனன்வெளி கிராம மக்களோடு முள்ளிவாய்க்கால் கஞ்சி அருந்தி அவர்களோடு விடயங்களை ஆராய்ந்தேன். அன்றைய தினம் மூதூர் பிரதேசத்தில் சேனையூர் கிராமத்தில் மக்கள் முள்ளிவாய்க்கால் கஞ்சி காய்ச்சி நினைவு கூர்ந்தார்கள் . முள்ளிவாய்க்கால் இறுதிப் போரில் இந்தக் கஞ்சிதான் எத்தனையோ மக்களின் உயிர்களைக் காப்பாற்றியது என்பதனை நினைவு கூர்ந்தார்கள் .

சேனையூர் கிராமத்தில் இந்தக் கஞ்சியைக் காய்ச்சிக் கொடுத்த பெண்களை ஞாயிற்றுக்கிழமை இரவு ஆண், பெண் பொலிஸார் மிருகங்களாக மாறி, மிகக் கேவலமாக கதறக் கதற அந்தப் பெண்களைக் கைது செய்துள்ளனர். ஒரு கஞ்சி காய்ச்சிக் கொடுத்தவர்களை இரவு வேளையில் சென்றுதான் உடுத்த உடுப்போடு கதறக் கதறக் கைது செய்து கொண்டு வர வேண்டுமா? கமலேஸ்வரன் விஜிதா, கமலேஸ்வரன் தேமிலா, செல்வவினோத்குமார் சுஜானி ஆகிய 3 பெண்களே இவ்வாறு மிருகத்தனமான முறையில் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களோடு சேர்த்து தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் முன்னாள் மூதூர் பிரதேச சபை முன்னாள் உறுப்பினர் ஹரிஹரகுமாரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த நாட்டில் என்ன நடக்கின்றது? இந்த நாடு எங்கே போய்க்கொண்டிருக்கின்றது? பலரும் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் பேசுகின்றார்கள். ஜனாதிபதி வேட்பாளர்கள் இறக்கப்படுகின்றார்கள். ஆனால், பொலிஸ் அராஜகம், பொலிஸ் அடாவடி, பொலிஸாரின் மிருகத்தனம் கடந்த ஞாயிற்றுக்கிழமையும் இந்த மண்ணில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

இதே திருகோணமலை மண்ணில் தான் 1954 ஆம் ஆண்டு 154 தமிழ் விவசாயிகள் இதே பொலிஸார் பார்த்துக்கொண்டிருக்கச் சிங்களக் காடையர்களால் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டார்கள். அப்போது தொடங்கிய இந்தப் பொலிஸ் அராஜகம், பொலிஸ் இனவாதம் மீண்டும் திருகோணமலை மண்ணில் அரங்கேறியுள்ளது.

கஞ்சி சுகாதாரமான முறையில் காய்ச்சப்படவில்லை என்று சொல்வதற்கு அந்தச் சுகாதார அறிவுறுத்தலை பொலிஸாருக்கு வழங்கியவர்கள் யார்? ஆகவே, மிக மிலேச்சத்தனமாக, மிருகங்களாக பொலிஸார் நடந்துள்ளனர்.

வெசாக் வருகின்றபோது நீங்கள் தெருத்தெருவாக உணவு வழங்குகின்றீர்கள். கஞ்சி வழங்குகின்றீர்கள். அப்போது சுகாதாரம் பற்றிக் கேட்டீர்களா? அல்லது யாரும் அதனை வேண்டாம் என்று சொன்னார்களா?

இலங்கை மிக மோசமான நாடு. மிகக்கேவலமான நாடு. உலகத்தில் அதிகமான நேரம் நித்திரை கொள்ளும் நாடுதான் இலங்கை என்று அறிந்தேன். ஆனால், கஞ்சி வழங்குபவர்களையே கைது செய்யும் கேவலமான நாடாக இலங்கை உள்ளது. 15 வருடங்களுக்கு முன்னர் தமிழ் மக்கள் துடிக்கத் துடிக்கக் கொல்லப்பட்டபோது பாற்சோறு வழங்கி அதனைக் கொண்டாடிய நாடே இலங்கை.

யாருக்கு நல்லிணக்கம் தேவை? யாருக்கு சமாதானம் தேவை? யார் பாதிக்கப்பட்டுள்ளார்கள்? என்பதனை, எவருடைய மனங்கள் திருத்தப்பட வேண்டும் என்பதனை, யாருடைய அராஜகங்கள் நிறுத்தப்பட வேண்டும் என்பதனை இலங்கையில் இருக்கின்ற தொண்டு நிறுவனங்களும் சமாதானம் விரும்புகின்ற, நல்லிணக்கம் விரும்புகின்ற அமைப்புக்களும் கருத்தில் எடுக்க வேண்டும்.

இவ்வாறான அராஜகம் நடக்கும் நிலையில்தான் சர்வதேச மன்னிப்பு சபையினுடைய செயலாளர் நாயகம் அக்னஸ் கல்மாட் இலங்கை வருகின்றார். அவர் எதிர்வரும் 18ஆம் திகதி முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வில் பங்குபற்றுகின்றார் என்று செய்திகள் வந்துள்ளன. அவருக்கு நான் இந்தச் சபை ஊடாக ஒன்றைச் சொல்ல விரும்புகின்றேன். இங்கே நல்லிணக்கம் இல்லை. சமாதானம் இல்லை. இங்கே பொலிஸ் அராஜகம் உள்ளது என்பதனை உங்கள் கவனத்துக்குச் சமர்ப்பிக்கின்றோம்." – என்றார்.




# முல்லைக் கைத்தறி நெசவாலை முல்லைத்தீவில் நேற்று உதயம்



வடக்கு, கிழக்குப் பொருளார மேம்பாட்டு நடுவத்தால் கனடியத் தமிழ்ப் பேரவையின் முன்னெடுப்பில் புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவில் நேற்று முல்லைக் கைத்தறி நெசவு நிலையம் திறந்து வைக்கப்பட்டது.

இயங்கா நிலையில் உள்ள தொழிற்சாலைகளைப் பாதிக்கப்பட்ட மக்களின் பொருளாதாரத்தை உயர்த்தும் வகையில் (குறிப்பாகப் பெண்கள்) வெற்றிகரமாக இயக்க முன்னெடுக்கப்பட்டு வரும் திட்டத்தின் வாயிலாக இந்த நிலையம் தொடங்கப்பட்டுள்ளது.

புதுக்குடியிருப்புப் பிரதேச செயலகம் மற்றும் எழுகை மாற்றுத் திறனாளிகள் சங்கத்துடன் இணைந்து நேற்றிலிருந்து இந்தத் தொழில் முயற்சி நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் சிவராசசிங்கம் ஜெயகாந்த், பிரதேச சபை செயலாளர் சச்சிதானந்தம் கிரிசந்தன், கனடியத் தமிழர் பேரவையின் மாந்த நேயப் பணிகளுக்கான இணைப்பாளர் துரைரத்தினம் இராசலச்சுமி துசியந்தன், வடக்கு, கிழக்குப் பொருளாதார மேம்பட்டு நடுவதின் இயக்குநர் சோதிலிங்கம் பிரதீபன் ஆகியோரால் நேற்றுக் காலை 10.30 மணிக்கு முல்லைக் கைத்தறி நெசவு நிலையம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இவர்களுடன் வேறு பல பிரதேச செயலக அதிகாரிகளும், உள்ளூர் தொழில் முனைவோரும் பயனாளர்களும் கலந்து கொண்டனர்.



## கைதான நால்வருக்கும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பரிமாறிய குற்றச்சாட்டில் கைதான பல்கலைக்கழக மாணவி உள்ளிட்ட நால்வரையும் குடியியல் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச சமவாயச் சட்டத்தின் கீழ் எதிர்வரும் 14 நாட்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சம்பூர் பொலிஸாரால் நேற்றுமுன்தினம் இரவு கைது செய்யப்பட்ட நால்வரும் நேற்று மூதூர் நீதிவான் நீதிமன்றத்தில் மேற்படி சட்டத்தின் கீழ் முற்படுத்தப்பட்டதையடுத்து, அவர்களை எதிர்வரும் 27ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் தஸ்னீம் பௌசான் உத்தரவிட்டுள்ளார்.

சமூகச் செயற்பாட்டாளர் கமலேஸ்வரன் விஜிதா (வயது 40), அவரின் மகளான கிழக்குப் பல்கலைக்கழக மாணவி கமலேஸ்வரன் தேமிலா (வயது 22), சமூகச் செயற்பாட்டாளர் செல்வவினோத்குமார் சுஜானி (வயது 40), தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பிரதேச சபை முன்னாள் உறுப்பினர் நவரெட்ணராஜா ஹரிஹரகுமார் (வயது 43) ஆகியோரே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

முள்ளிவாய்க்காலில் படுகொலை செய்யப்பட்ட தமிழ் உறவுகளை நினைவு கூரும் வகையில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை சேனையூர் பிள்ளையார் ஆலயத்தில் முள்ளிவாய்க்கால் கஞ்சி பரிமாறும் நிகழ்வு பொதுமக்களால் முன்னெடுக்கப்பட்டிருந்தபோது சம்பூர் பொலிஸாரால் நீதிமன்றத் தடை உத்தரவு வழங்கப்பட்டது.

அந்தத் தடை உத்தரவை வாங்காமல் முள்ளிவாய்க்கால் கஞ்சி பரிமாறும் நிகழ்வை முன்னெடுத்த குற்றத்துக்காகவே மேற்படி நால்வரும் கைது செய்யப்பட்டனர்.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# ரணிலின் கோட்டா முகம்

ரணில் - ராஜபக்ஷ ஆட்சிப் பீடத்தின் பேரினவாதக் கோரமுகம் மீண்டும் ஒரு தடவை அம்பலமாகியிருக்கின்றது.

முள்ளிவாய்க்கால் கொடூரங்களில் தமது பல்லாயிரம் உறவுகளைத் துடிக்கத் துடிக்கப் பறி கொடுத்த தமிழ் மக்கள், பதினைந்து ஆண்டுகள் கழிந்தும் கூட தம் உறவுகளை நினைவேந்துவதற்கு விடாமல் தனது குரூர முகத்தைக் காட்டி நிற்கின்றது ரணிலின் அரசு. இவ்விடயத்தில் தனது அரசு, முன்னைய கோட்டாபய அரசுக்கு சற்றும் சளைத்ததே அல்ல என்பதை இப்போது நிரூபித்து நிற்கின்றது அது.

தமிழ் மக்களின் நினைவேந்தும் உரிமை மறுக்கப்பட முடியாதது என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வெளிப்பகட்டுக்கு - சர்வதேச உலகின் முன் - தன்னை நியாய வாதியாகக் காட்டி, உபதேசம் பண்ணும் அதேசமயம், செயற்போக்கில் அந்த உரிமையை மோசமான முறையில் மறுத்து, மிகக் கேவலமாக நடந்து கொள்கின்றது அவரது அரசு.

நினைவேந்தும் உரிமையை மறுப்பது மட்டுமல்ல, அப்படி நினைவேந்தும் தமிழ் உறவுகளை கொடூர அடக்குமுறைச் சட்டத்தின் கீழ் கைது செய்து, பிணையில் கூட வெளியில் வர முடியாதபடி பூட்டுக்களைப் போடுவதன் வாயிலாக, ரணிலின் அரசும் கூட 'அரச பயங்கரவாதத்தை' தொடர்ந்து கடைப்பிடிக்கத் தவறவில்லை.

மூதூர் சம்பூரில் நேற்று முன்தினம் இரவு 3 பெண்கள் உட்பட நால்வர் மிக மோசமான - முரட்டுத்தனமான - நடவடிக்கைகள் மூலம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டமையும், அதையொட்டிய வழக்கில் நேற்று கட்டவிழ்ந்த விடயங்களும் மீண்டும் அரச பயங்கரவாதப் பெருவிருட்சத்தின் உச்சத்தில் அரச வேதாளம் ஏறி குந்தி விட்டது என்பதற்கு அத்தாட்சி.

பல்கலைக்கழக மாணவி உள்ளிட்ட 03 பெண்கள் உட்பட நால்வரை மூதூர் நீதிவான் நீதிமன்றில் நிறுத்தி, சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச சமவாயச் சட்டத்தின் (ICCPR சட்டத்தின்) கீழ் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர் பொலிஸார். அதன் அடிப்படையில் அவர்கள் நால்வரையும் எதிர்வரும் 27ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்று உத்தரவிட்டுள்ளது.

இந்தச் சட்டத்தின் உறுப்புரைப்படி - யுத்தத்தைத் தூண்டுதல், வன்முறைகளில் ஈடுபடுதல், அதற்காக ஒன்று திரளுதல், இன, மத குரோதங்களை ஏற்படுத்துதல் போன்றவற்றில் ஈடுபடுவோர் இச்சட்டத்தின் கீழ் தவறொன்றுக்காகக் குற்றவாளியாதல் வேண்டும். இந்த உறுப்புரையின் கீழ் உள்ள குற்றச் செயல் பாரதூரமானதும் பிணை வழங்கமுடியாததுமான குற்றமாகும்.

இத்தகைய குற்றம் புரிந்துள்ளவர் எனச் சந்தேகிக்கப்படும் அல்லது குற்றம் சாட்டப்படும் நபர் விசேட சந்தர்ப்பங்களில் உயர்நீதிமன்றத்தினூடாகவேயன்றி வேறு நீதிமன்றங்களூடாக பிணையில் செல்ல முடியாது.

ஆக, இனி இவர்கள் பிணை கோர உயர்நீதி மன்றத்தையே நாட வேண்டும். நீதிவான் நீதிமன்றினாலோ, மேல் நீதிமன்றினாலோ இவர்களுக்குப் பிணை வழங்க முடியாது.

மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் மேம்படுத்துவதற்குமென உருவாக்கப்பட்ட இச்சட்டத்தை அரசியல் செயற்பாட்டாளர்கள், மனித உரிமைகள் ஆர்வலர்கள், எழுத்தாளர்கள், கலைஞர்கள் மற்றும் சட்டத்தரணிகளை மௌனிக்கச் செய்வதற்கும், அவர்களைத் தண்டிப்பதற்கும் அரசாங்கம் பயன்படுத்தி வருகின்றது.

இப்போது மறைந்த தமது உறவுகளை நினைவேந்த முயன்ற தமிழ் மக்கள் மீது இனக்குரோதத்தைத் தூண்டிய குற்றச்சாட்டு மோசமான முறையில் - அபாண்டமாக - சுமத்தப்படுகின்றது. பேரினவாதத்தை வெறித்தனமாக முன்னெடுக்கும் ஆட்சியாளர்கள் மீதும், அவர்களின் அரசுக் கட்டமைப்புக்கள் மீதும் பாய வேண்டிய சட்டம் அதே தரப்புகளினால் அப்பாவிகள் மீது பாய விடப்படுகின்றது.

ரணில்-ராஜபக்ஷ அரசின் அரசுத்தலைவரான விக்கிரமசிங்க, தன்னை கோட்டாபயவின் மறுபிறப்பாக காட்டும் நடவடிக்கையின் ஒர் அங்கமே இது.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலிலும் ராஜபக்ஷக்களுடன் அணிசேர விழையும் ரணில் விக்கிரமசிங்க, 'பன்றியுடன் சேரும் கன்றாக'த் தம்மை மாற்றிக் கொள்கின்றார். அதனால் இன்னும் பல பேரினவாத வெறிப்போக்குச் செயற்பாடுகளை ஜனாதிபதி தேர்தலுக்கு இடையில் அவரிடமிருந்து நாம் தாராளமாக எதிர்பார்க்க முடியும்.

# இந்தியாவின் காஷ்மீரில் வீதி அமைக்கின்றது சீனா




காஷ்மீரின் சியாச்சின் பனிப்பாறைக்கு அருகில் சட்ட விரோதமாக ஆக்கிரமிக்கப்பட்ட ஒரு பகுதியில் சீனாவால் வீதி ஒன்று அமைக்கப்படுதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

உலகின் மிக உயரமான போர்க்களமாக கருதப்படும் இந்த பகுதியில் சீனா வீதி அமைப்பில் ஈடுபட்டு வருகின்றமை செயற்கைக்கோள் படங்கள் மூலம் தெரியவந்துள்ளது.

இந்த நிலையில், அந்த பாதை அமைப்பானது இந்தியாவுக்கு பாதுகாப்பு தாக்கங்களை ஏற்படுத்தக்கூடியது என்று எச்சரிக்கப்பட்டுள்ளது.

ஐரோப்பிய விண்வெளி முகவரகத்தினால் பெறப்பட்ட செயற்கைக்கோள் படங்களின்படி, இந்த பாதை கடந்த ஆண்டு ஜூன் மற்றும் ஓகஸ்ட் மாதங்களுக்கு இடையில் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், கார்கில், சியாச்சின் பனிப்பாறை, கிழக்கு லடாக் ஆகிய இடங்களுக்குப் பொறுப்பான இந்திய இராணுவத்தின் தீயணைப்பு மற்றும் கோப்ஸ் படையின் முன்னாள் தளபதி லெப்டினனட் ஜெனரல் ராகேஸ் சர்மா, "இந்தச் சாலை முற்றிலும் சட்டவிரோதமானது. இதற்கு இராஜதந்திர ரீதியில் எதிர்ப்புத் தெரிவிக்க வேண்டும்" என்று வலியுறுத்தியுள்ளார்.

எனினும், வரலாற்று ரீதியாக காஷ்மீரின் அந்த பகுதி இந்தியாவால் உரிமை கோரப்படுகிறது.

ஜம்மு – காஷ்மீரின் சட்டப்பிரிவு 370 இரத்து செய்யப்பட்ட பின் மத்திய அரசால் வெளியிடப்பட்ட சமீபத்திய அதிகாரப்பூர்வ வரைபடத்திலும் இந்தப் பகுதி இந்தியப் பிரதேசமாகக் காட்டப்படுகிறது.

சுமார் 5 ஆயிரத்து 300 சதுர கிலோ மீற்றர் பரப்பளவிலான இந்த பிரதேசம் 1947ஆம் ஆண்டு இடம்பெற்ற போரில் பாகிஸ்தானால் கைப்பற்றப்பட்டு, 1963 இல் கையெழுத்தான இருதரப்பு எல்லை ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாக சீனாவிடம் ஒப்படைக்கப்பட்டது. ஆனால், இது இந்தியாவால் அங்கீகரிக்கப்படவில்லை.

இந்த நிலையில், ஆக்கிரமிக்கப்பட்ட காஷ்மீரின் இந்தப் பகுதியில் மேற்கொள்ளப்படும் எந்தவொரு மாற்றமும் இந்தியாவின் இறையாண்மை மற்றும் பிராந்திய ஒருமைப்பாட்டை மீறுவதாகும் என்று இந்திய பாதுகாப்பு வல்லுநர்கள் நீண்ட காலமாக வாதாடி வந்துள்ளனர்.

# ஸ்டாலினால் பிரதமராக முடியுமா? அமித் ஷா கேள்வி எழுப்புகின்றார்



"இண்டியா கூட்டணியில் யார் பிரதமர்? ஸ்டாலினால் அல்லது ராகுல் காந்தியால் பிரதமராக முடியுமா?."

– இவ்வாறு மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா கேள்வி எழுப்பியுள்ளார்.

மும்பையில் நடந்த பா.ஜ.க. பிரச்சார பேரணியில் கலந்து கொண்ட அமித் ஷா உரையாற்றுகையில்,

"என் வாழ்நாளில் இவ்வளவு பக்தி பரவசத்தை நான் கண்டதில்லை. ராமர் கோயில் கும்பாபிஷேக நாளில் ஒட்டுமொத்த தேசமும் பக்தியில் மூழ்கி இருந்தது.

கும்பாபிஷேக விழாவில் கலந்து கொள்ள ராகுல் காந்தி, சரத்பவார், உத்தவ் தாக்கரே மற்றும் சுப்ரியா சுலே ஆகியோருக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. ஆனால், அவர்களோ தங்களின் வாக்கு வங்கியை இழந்துவிடுவோமோ என்ற அச்சத்தில் ராமர் கோயில் விழாவில் பங்கேற்கவில்லை.

அழைப்பு விடுக்கப்பட்டும் உத்தவ் தாக்கரே கும்பாபிஷேக விழாவில் கலந்து கொள்ளாதது ஏன்? அந்த வாக்கு வங்கிக்கு நாங்கள் பயப்படவில்லை. அதனால்தான் பிரதமர் மோடி, முன்பு அவுரங்கசீப்பால் இடித்துத் தள்ளப்பட்ட காசி விஸ்வநாத் வளாகத்தை கட்டி முடித்தார்.

இரண்டு நாளகளுக்கு முன்புதான், மகாராஷ்டிர காங்கிரஸ் தலைவர், தாங்கள் ஆட்சிக்கு வந்தால் ராமர் கோவிலை சுத்தப்படுத்துவோம் என்று பேசியுள்ளார். அவரது மூளை குழம்பிவிட்டதா என்று அவரிடம் கேட்க விரும்புகிறேன். பகவான் ராமர் இருக்கும் இடம் தூய்மையற்றதாக இருக்க முடியுமா? அவர்களுக்கு நமது பாரம்பரியம் தெரியாது, மதம் புரியாது. அவர்கள் தங்கள் சுயநல தேவைகளை மட்டுமே புரிந்துகொள்கிறார்கள்.

இண்டியா கூட்டணியின் தலைவர் யார் என்று நான் அவர்களிடம் கேட்கிறேன். அவர்களில் யார் பிரதமர்? உத்தவ் தாக்கரே பிரதமராக முடியுமா? சரத் பவார் பிரதமராக முடியுமா? ஸ்டாலின் பிரதமராக முடியுமா? மம்தாவால் ஆக முடியுமா? அல்லது ராகுல் காந்தி ஆக முடியுமா?

பிரதமர் யார் என்று ஒரு பத்திரிகையாளர் கேட்டதற்கு, இண்டியா கூட்டணி தலைவர் ஒருவர், கூட்டணியின் தலைவர்கள் அனைவரும் மாறி மாறி பிரதமராக வருவார்கள் என்று கூறுகிறார். பிரதமர் என்பவர் உலகெங்கிலும் நமது தேசத்தை பிரதிநிதித்துவப் படுத்தவேண்டும். மாறி மாறி அரசாங்கத்தை நடத்தினால், ஒருவேளை தொற்று பரவல் ஏற்பட்டால் அதற்கு யார் பொறுப்பேற்பார்கள்?

தீவிரவாதி கசாப்பை காங்கிரஸ் தலைவர்கள் ஆதரிக்கின்றனர். உத்தவ் தாக்கரேவும் அதே நிலைப்பாட்டில் இருக்கிறாரா? மகாராஷ்டிர மக்களுக்கு அவர் பதில் சொல்ல வேண்டும். முஸ்லிம் தனிநபர் சட்டத்தை மீண்டும் அறிமுகப்படுத்தும் துடிக்கும் காங்கிரஸ்/டன் கைகோத்துள்ளாரா என்பது குறித்து உத்தவ் பதிலளிக்க வேண்டும்." – என்றார்.

# இந்தோனேஷியாவில் வெள்ளம், மண்சரிவில் சிக்கி 37 பேர் பலி





இந்தோனேஷியாவில் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் மண்சரிவில் சிக்குண்டு 37 பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்தோனேஷியாவின் மேற்குப் பகுதியில் பெய்த பலத்த மழை காரணமாக வெள்ளம் மற்றும் மண்சரிவுகள் ஏற்பட்டுள்ளன.

அதேநேரம் இந்த அனர்த்தம் காரணமாக 17 பேர் காணாமல் போயுள்ளனர் என அந்த நாட்டு செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த நிலையில் அவர்களைத் தேடும் பணிகளில் மீட்புப் படையினர் ஈடுபட்டு வருகின்றனர்.

வெள்ளம் மற்றும் மண்சரிவினால் பொதுமக்களின் சொத்துக்கள் மற்றும் உடமைகளுக்கும் சேதம் ஏற்பட்டுள்ளன என செய்திகள் வெளியாகியுள்ளன.

# அமெரிக்க ஜனாதிபதிக்கு ஹமாஸ் கடும் கண்டனம்



பணயக் கைதிகளை விடுவிப்பது குறித்து அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தெரிவித்த கருத்துக்கு ஹமாஸ் அமைப்பினர் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

கடந்த ஆண்டு ஒக்டோபர் மாதம் நடந்த தாக்குதலின் போது ஹமாஸ் அமைப்பினரால் பணையக் கைதிகளாக பிடித்து செல்லப்பட்டவர்களை விடுவித்தால் காசாவில் நாளையே போர் நிறுத்தம் சாத்தியமாகும் என ஜோபைடன் அண்மையில் தெரிவித்தார்.

இந்த நிலையில் ஜோபைடனின் இந்தக் கருத்துக்கு ஹமாஸ் அமைப்பினர் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக அந்த அமைப்பு சார்பில் வெளியிடப்பட்ட அறிக்கையில் அமெரிக்க ஜனாதிபதியின் இந்த நிலைப்பாட்டை தாம் கண்டிப்பதாகவும், பல சுற்றுகளாக நடந்து வரும் பேச்சு வார்த்தையில் ஒரு பின்னடைவாக இதை தாம் கருதுவதாகவும் குறிப்பிட்டுள்ளனர்.

# பாகிஸ்தானில் இடம்பெற்ற வன்முறையில் ஒருவர் உயிரிழப்பு; 100 பேர் படுகாயம்



பாகிஸ்தானில் கடந்த சில மாதங்களாக கடும் பொருளாதார நெருக்கடி நிலவுகிறது. இதனால் பணவீக்கம் ஏற்பட்டு அத்தியாவசிய பொருள்களின் விலைகள் உயர்ந்துள்ளது.

இந் தநிலையில் விலை உயர்வை கண்டித்தும், மேல்தட்டு மக்களுக்கு வழங்கும் சலுகைகளை ரத்து செய்ய கோரியும் அரசாங்கத்துக்கு எதிராக பொதுமக்கள் போராட்டத்தில் குதித்தனர்.

அதன்படி தகவலறிந்த பொலிஸார் போராட்டத்தை கைவிடும்படி வலியுறுத்தினர். அப்போது போராட்டக்காரர்களுக்கும், பொலிஸாருக்கும் இடையே தள்ளுமுள்ளு ஏற்பட்டது.

இதனை தொடர்ந்து ஏற்பட்ட வன்முறையில் பொது மக்கள் தாக்கியதால் பொலிஸ் அதிகாரி ஒருவர் உயிரிழந்துள்ளார். மேலும் 78 பொலிஸார் உள்பட 100 பேர் படுகாயம் அடைந்தனர்.

மேலும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அந்த பகுதியில் ஏராளமான பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளனர்.

இதற்கிடையே நிலவும் அசாதாரண சூழ்நிலையை சமாளிப்பது தொடர்பான அவசர கூட்டத்துக்கு ஜானாதிபதி ஆசிப் ஆலி சர்தாரி அழைப்பு விடுத்துள்ளார்.

# முள்ளிவாய்க்கால் கஞ்சிக்குப் பொலிஸார் சுகாதாரச் சீர்கேட்டை காட்டித்தான் தடை

## இதே காரணத்திற்காக வெசாக் தன்சல்களையும் கூட தடை செய்வரா என அம்பிகா சற்குணநாதன் கேள்வி



தமிழருக்கு எதிரான இன அழிப்பையும், மறைக்கப்பட்ட தமிழரின் வரலாற்றையும் அடுத்த தலைமுறைக்கு கடத்தும் வகையிலாக ஒவ்வொரு வருடமும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தில் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கப்பட்டு வருகின்றது. இவ்வாறான நிலையில் இவ்வருடம் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கியவர்களை இலங்கை பொலிஸார் கைது செய்துள்ளனர். அத்துடன் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்குவதை தடுத்து நிறுத்தும் நோக்குடன் நீதிமன்ற தடை உத்தரவையும் பெற்றுள்ளனர்.

எனவே நோய் பரவும் ஆபத்து என தெரிவித்து முள்ளிவாய்க்கால் கஞ்சி விநியோகத்தினை தடுத்த இலங்கை பொலிஸார் இதே காரணத்திற்காக வெசாக் தன்சல்களை தடை செய்யுமாறு நீதிமன்றத்திடம் வேண்டுகோள் விடுப்பார்களா என இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளர் அம்பிகா சற்குணநாதன் கேள்வி எழுப்பியுள்ளார்.

பொதுமக்களின் உயிரிழப்பிற்கு அரசாங்கம் காரணமில்லை எனக் காண்பித்து, வரலாற்றை அழிப்பதும் மறைப்பதுமே நினைவேந்தல்களை தடுப்பதன் நோக்கம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மக்கள் ஒன்றுகூடுவதன் மூலமும் உணவை பரிமாறிக்கொள்வதன் மூலமும் நோய் பரவும் என்பதாலேயே இந்த உத்தரவை பிறப்பித்துள்ளதாக நீதிமன்ற உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டியுள்ள அவர், ஏன் மே தினக்கூட்டங்களை தடை செய்யுமாறு பொலிஸார் நீதிமன்றங்களை கேட்டுக்கொள்ளவில்லை எனவும் கேள்வி எழுப்பியுள்ளார்.

அத்துடன் வெசாக் தன்சல்களையும் தேர்தல் பிரச்சார பேரணிகளையும் தடைசெய்யுமாறு பொலிஸார் நீதிமன்றங்களிடம் வேண்டுகோள் விடுப்பார்களா எனவும் கேள்வி எழுப்பியுள்ளார்.

எதிர்கட்சிகள் இதற்கு எதிராக குரல் கொடுப்பார்களா எனவும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.





# நேர்த்தியாக வழங்கப்படும் பசுக்கள் மக்களின் வாழ்வாதார மேம்பாட்டுக்கு

## தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தின் நேர்த்தியான திட்டம்

(பழுவூரான்)

கொக்கட்டிச்சோலை ஸ்ரீதான்தோன்றீஸ்வரர் ஆலய பரிபாலன சபை ஆலயத்திற்கு நேர்த்தியாக கிடைக்கப்பெறும் பசுக்களை விற்பனை செய்யாமல் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் முகமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் பிரதேச செயலகங்களுடன் இணைந்து மிகவும் பொருளாதார வசதி குறைந்த குடும்பத்திற்கு ஒரு பசு வழங்கும் வேலைத் திட்டத்தினை நடைமுறைப்படுத்தி வருகின்றது.

அதற்கு அமைவாக கட்டம் -2 நிகழ்வானது நேற்று முந்தினன் ஞாயிற்றுக்கிழமை கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலய முன்றிலில் இறைவன் திருவருளுடன் சிறப்பாக இடம்பெற்றது.

இதன்போது ஆலய வண்ணக்கர் மற்றும் நிருவாக சபை உறுப்பினர்கள் கலந்து கொண்டு தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு பசுக்களை வழங்கி வைத்தனர்.

இரண்டாம் கட்டத்தில் மண்முனை தென் எருவில்பற்று களுவாஞ்சிகுடி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட இரண்டு பயனாளிகளுக்கு ஆளுக்கு ஒரு பசு என்ற அடிப்படையில் வழங்கப்பட்டது.

அதனடிப்படையில் இனிவரும் காலங்களிலும் இந்த இறை பணி தொடரும் என ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்தனர்.









# அல்லைப்பிட்டி படுகொலை நடைபெற்ற இடத்தில் நேற்று முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வு!

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தின் இரண்டாவது நாளான இன்று யாழ் தீவகம் அல்லைப்பிட்டி படுகொலை இடம்பெற்ற இடத்தில் தீவகம் நினைவேந்தல் குழுவின் ஏற்பாட்டில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வும் முள்ளி வாய்க்கால் கஞ்சி வழங்குகின்ற நிகழ்வும் நடைபெற்றது.

இதன் போது முள்ளிவாய்க்கால் மண்ணில் உயிர் நீத்தவர்களின் நினைவாக பொதுச்சுடர் ஏற்றப்பட்டு அகவணக்கம் செலுத்தப்பட்டு மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டு மலரஞ்சலியும் செலுத்தப்பட்டது

அத்தோடு அல்லப்பிட்டி சேமக் காலையில் காணப்படும் அல்லைப்பிட்டி படுகொலையின் போது படுகொலை செய்யப்பட்டவர்களின் நினைவுத் நினைவுச் சுடர்கள் ஏற்றப்பட்டு மலர் தூவி அஞ்சலியும் செலுத்தப்பட்டது.

இந்நிகழ்வில் தீவக மறைக்கோட்ட முதல்வரும் அல்லைப்பிட்டி பங்கு தந்தையுமான பேனார்ட் றெக்னோ சிவில் சமூக செயற்பாட்டாளரும் யாழ் பல்கலைக் கழகத்தின் உடற்கல்வி விரிவுரையாளருமான மாணிக்கவாசகர் இளம்பிறையன் சிவில் சமூக செயற்பாட்டாளர் அல்லைப்பட்டி படுகொலையில் உயிரிழந்தவர்களின் உறவுகள் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டு அஞ்சலியை செலுத்தினர்.















# முள்ளிவாய்க்கால் நினைவு ஊர்தி நேற்று சாவகச்சேரி நகரத்தில்!

## சசிகலா ரவிராஜ்ஜின் தலைமையில் கஞ்சி வார்ப்பு

(த.சுபேசன்)

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வட்டுக்கோட்டைத் தொகுதி கிளையினால் முள்ளிவாய்க்கால் கஞ்சி விநியோகமும் முள்ளிவாய்க்கால் நினைவு ஊர்தி பவனியும் நேற்று திங்கட்கிழமை காலை 10.30மணியளவில் சாவகச்சேரி பஸ் நிலையத்திற்கு அண்மையில் உள்ள சிவன் ஆலயத்தில் திருமதி சசிகலா ரவிராஜ்ஜின் தலைமையில் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது முள்ளிவாய்க்கால் மண்ணில் உயிர்நீத்தவர்களை நினைவு கூர்ந்து முன்னாள் பேராளியும் முன்னாள் உபதவிசாளருமான விஜயனால் பொதுச்சுடர் ஏற்றி வைக்கப்பட்டது. தொடர்ச்சியாக ஈகைச்சுடரேற்றி அகவணக்கம் செலுத்தி மலரஞ்சலியும் செலுத்தப்பட்டது.

அதனைத் தொடர்ந்து முள்ளிவாய்க்கால் நினைவு கஞ்சியும் விநியோகிக்கப்பட்டது.

இதன்போது முள்ளிவாய்க்கால் கஞ்சியின் வரலாற்றினை உள்ளடக்கிய துண்டுபிரசுரமும் வழங்கி வைக்கப்பட்டது. தொடர்ந்து படுகொலை செய்யப்பட்ட நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ரவிராஜ்ஜின் திருவுருவ சிலை முன்றி லிலும் முள்ளிவாய்க்கால் நினைவு கஞ்சி விநியோகிக்கப்பட்டது.















# திருக்கேதீஸ்வர மகோற்சவம் கொடியேற்றத்துடன் ஆரம்பம்

**(மன்னார் நிருபர்)**

வரலாற்றுச் சிறப்பு மிக்க மன்னார் திருக்கேதீஸ்வர ஆலய வருடாந்த மகோற்சவப் பெருந்திருவிழா நேற்றுக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது.

மன்னார் திருக்கேதீஸ்வர ஆலய பிரதம குரு கருணாணந்தக் குருக்கள் தலைமையில் காலை 10 மணி தொடக்கம் 12 மணி வரையான சுப நேரத்தில் கொடியேற்றம் இடம் பெற்றது.

காலையில் உற்சவ மூர்த்திகளுக்கு வசந்த மண்டபத்தில் விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெற்றன.

அதனைத் தொடர்ந்து உற்சவ மூர்த்திகள் கொடிக் கம்பத்திற்கு முன் எழுந்தருளியமையைத் தொடர்ந்து விசேட வழிபாடுகள் இடம்பெற்றன.

தொடர்ந்து கொடிக் கம்பத்திற்கு விசேட அபிஷேகம் இடம் பெற்றது.

அதன்பின் கொடியேற்றும் விழாவில் இடம்பெற்றது.கொடியேற்ற பெரு விழாவில் பல நூற்றுக்கணக்கான அடியார்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.











# நல்லூரில் பசுமை இயக்கத்தின் ‘அற்றார் அழிபசி தீர்த்தல்’ திட்டம்

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் பொருளாதார ரீதியாக மிகவும் பாதிப்படைந்துள்ள குடும்பங்களுக்கு உலருணவுப் பொதிகளை வழங்கும் ‘அற்றார் அழிபசி தீர்த்தல்’ என்ற திட்டத்தைச் செயற்படுத்தி வருகின்றது.

‘பகிர்ந்துண்டு வாழ்வோம்’ என்ற கருப்பொருளில் செயற்படுத்தப்பட்டுவரும் இத்திட்டம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை நல்லூரில் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசனின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் நல்லூர் பிரதேச செயலக எல்லைக்கு உட்பட்ட வெவ்வேறு பகுதிகளில் இருந்து தெரிவு செய்யப்பட்ட நூறு குடும்பங்களுக்கு அத்தியாவசிய உலருணவுகள் அடங்கிய பொதிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன. இவற்றுக்கான நிதி அனுசரணையைக் கனடாவில் இருந்து வருகை தந்திருந்த செல்லையா சத்தியலிங்கம் மற்றும் இலண்டன் வாழ் சற்குணநாதன் துஷாகரன் ஆகியோர் வழங்கியிருந்தார்கள்.

கொரோனாப் பெருந் தொற்றுக் காலத்தில் ஏற்பட்ட தொழில் இழப்பைத் தொடர்ந்து, நாட்டின் பொருளாதாரத்தில் ஏற்பட்டுள்ள பாரிய வீழ்ச்சி பொருளாதார ரீதியாகப் பின்தங்கியுள்ள குடும்பங்களை வெகுவாகப் பாதித்துள்ளது. இதனைக் கருத்திற்கொண்டு தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் கொரோனாப் பேரிடர்க் காலத்தில் ஆரம்பித்த ‘அற்றார் அழிபசி தீர்த்தல்’ திட்டத்தை இன்றுவரை கைவிடாது தொடர்ந்து செயற்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.













# காரைதீவு கண்ணகை அம்மன் ஆலயத்தின் மரபுப்பட்டய அறிவிப்பு குதிரை வண்டியில்!

**(வி.ரி.சகாதேவராஜா)**

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற காரைதீவு ஸ்ரீகண்ணகை அம்மன் ஆலய வருடாந்த வைகாசி திருக்குளிர்த்தி மரபுப் பட்டய ஊர்பூராக அறிவிப்பு இம்முறை புது முறையாக குதிரை வண்டி சகிதம் இடம் பெற்றது.

சடங்கு காலத்தில் கிராமத்தில் பொது மக்கள் கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகள் தொடர்பான பாரம்பரிய மரபுப் பட்டயம் அறிவித்தல் சடங்கு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை நடைபெற்றது. கடந்த காலங்களில் மாட்டுவண்டி சகிதம் இப்பட்டய அறிவிப்பு இடம் பெற்று வந்தது.

இதுவரை காலமும் இல்லாத புது நடைமுறையாக குதிரை வண்டி இம்முறை அறிமுகப் படுத்தப்பட்டது.











# சாதாரண தர பரீட்சை வினாத்தாள் 'வாட்ஸ் அப்பில்' பகிரப்பட்டமை தொடர்பில் மற்றுமொருவர் கைது!

கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சையின் ஆங்கிலப் பாட வினாத்தாள் 'வாட்ஸ் அப்' ஊடாக பகிரப்பட்ட சம்பவம் தொடர்பில் மற்றுமொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பரீட்சை நிலையத்தில் கடமையிலிருந்த ஒருவரே கண்டியில் வைத்து, குற்றப்புலனாய்வுத்திணைக்களத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் நேற்று முன்தினம் ஒருவர் கைது செய்யப்பட்டிருந்தார்.

ஆங்கிலப் பாட வினாத்தாள் பகிரப்பட்ட 'வாட்ஸ் அப்' குழுவின் நிர்வாகியொருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டார்.

கடந்த 9 ஆம் திகதி, ஆங்கிலப் பாடத்திற்குரிய பரீட்சை ஆரம்பித்து சிறிது நேரத்தில் அந்த வினாத்தாள் 'வாட்ஸ் அப்' குழுக்களினூடாக பகிரப்பட்டுள்ளமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இதனிடையே, விஞ்ஞானப் பாடத்திற்கான வினாத்தாளில் பாடத்திட்டத்திலிருந்து நீக்கப்பட்ட பகுதியிலிருந்தும் வினாக்கள் தயாரிக்கப்பட்டமை குறித்து சமூக ஊடகங்களில் அதிகம் பேசப்படுகின்றது.

இந்த விடயம் குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளதுடன் அந்த பாடத்திற்கான விடைத்தாள்கள் பரிசீலனைக்குட் படுத்தப்பட்டுள்ளன எனப் பரீட்சைகள் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இதில் ஏதேனும் பிரச்சினைகள் கண்டறியப்பட்டால், பரீட்சார்த்திகளுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் அனைத்து




நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் என திணைக்களம் விளக்கமளித்துள்ளது.

இதேவேளை, கல்வி பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சைக்கு இடையூறு ஏற்படுத்தக்கூடிய பாரதூரமான சம பவங்கள் எதுவும் இதுவரை பதிவாகவில்லை என பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பரீட்சை விதிகளை மீறி பரீட்சை மோசடியில் ஈடுபடும் பரீட்சார்த்திகள் மற்றும் நபர்களை அடையாளம் காண விசேட வேலைத்திட்டமொன்று திட்டமிடப்பட்டுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வாறு அடையாளம் காணப்பட்டவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனப் பரீட்சை திணைக்களத்தின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களை அமுல்படுத்துவதற்காக நாடளாவிய ரீதியில் விசேட கண்காணிப்பு அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர் எனப் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் சுட்டிக்காட்டியுள்ளார்.




## க.பொ.த. சாதாரண தர பரீட்சை:

# விஞ்ஞானப் பாடத்தின் சில வினாக்களுக்கு இலவசப் புள்ளிகளை வழங்குவதற்கு முடிவு

இம்முறை சாதாரண தரப் பரீட்சையின் விஞ்ஞானப் பாட வினாத்தாளில் சில வினாக்களுக்கு இலவசப் புள்ளிகளை வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அந்த வினாத்தாளின் சில பல்தேர்வு வினாக்களில் காணப்பட்ட குளறுபடிகள் காரணமாக இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குளறுபடிகள் காணப்படும் வினாக்களுக்கு மாத்திரம் இவ்வாறு இலவசப் புள்ளிகள் வழங்கப்படவுள்ளன எனப் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

கடந்த வாரம் இடம்பெற்ற சாதாரண தரப் பரீட்சையின் விஞ்ஞானப் பாட வினாத்தாளில் சிக்கல் நிலை காணப்படுவதாக சமூக வலைத்தளங்களில் தகவல்கள் வெளியாகியிருந்தன.

விஞ்ஞானப் பாடத்திற்கான வினாத்தாளில் காணப்படும் சில வினாக்கள் கட்டாய கற்றலுக்கான உள்ளடக்கங்களுக்கு அப்பால் காணப்படும் விடயங்களில் இருந்து தயாரிக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்த விடயத்தை அடிப்படையாகக் கொண்டு சில இலவசப் புள்ளிகளை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர குறிப்பிட்டுள்ளார்.



# மன்னார் பள்ளிமுனைக் கடலில் வள்ளம் தாண்டதில் மீனவர் சாவு

(எஸ்.றொசேரியன் லெம்பேட்)


மன்னார் பள்ளிமுனை கடற்பரப்பில் இருந்து நேற்றுத் திங்கட்கிழமை மாலை வள்ளத்தில் கடற்றொழிலுக்குச் சென்ற குடும்பஸ்தர் ஒருவர் வள்ளம் தண்டதில் கடலில் விழுந்து உயிரிழந்தார்.

உயிரிழந்தவர் மன்னார் பள்ளிமுனை மேற்கு பகுதியைச் சேர்ந்த எஸ்.ஏ.ஜான்சன் (வயது-62) என்ற குடும்பஸ்தர் என அடையாளம் காணப் பட்டுள்ளார்.

உயிரிழந்தவர் உள்ளடங்கலாக மேலும் சில மீனவர்கள் வள்ளம் ஒன்றில் தொழிலுக்குச் சென்றுள்ளனர். நேற்று மாலை 4 மணியளவில் திடீரெனக் கடும் காற்றுடன் மழை பெய்துள்ளது.

அதனால் இந்த மீனவர்கள் சென்ற வள்ளம் கடலில் மூழ்கியது. அந்த அனர்த்தத்தில் ஏனையவர்கள் தப்பிய போதும் மேற்படி குடும்பஸ்தரான மீனவர் கடலில் மூழ்கி உயிரிழந்தார்.

அவரின் சடலம் மீட்கப்பட்டு மன்னார் வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளை மன்னார் வைத்தியசாலைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# தாமரைக் கோபுரத்திலிருந்து பரசூட் சாகசத்தில் ஈடுபட்ட அமெரிக்கப் பிரஜை காயமடைந்தார்!

கொழும்பு தாமரை கோபுரத்தில் பரசூட் சாகச விளையாட்டில் ஈடுபட்ட வெளிநாட்டவர் ஒருவர் காயமடைந்துள்ளார்.

இந்த சாகசத்தில் ஈடுபடுவதற்காக 35 வெளிநாட்டவர்கள் நாட்டிற்கு வருகை தந்துள்ளனர் என தாமரை கோபுரத்தின் கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

தாமரை கோபுரத்தின் மேல் பகுதியில் இருந்து கீழ்நோக்கி குதித்த சந்தர்ப்பத்தில் அவர்களில் ஒருவரின் பரசூட்டை விரிப்பதற்கு தாமதமானமையினால் இந்த விபத்து நேர்ந்துள்ளது.

காயமடைந்த வெளிநாட்டவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையின் அவசர விபத்துப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். விபத்தில் காயமடைந்தவர் அமெ ரிக்க பிரஜை என கொழும்பு தேசிய வைத்தியசாலை பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.



# மூதூர் சீனன்வெளி விநாயகர் ஆலயத்தில் ஞாயிறு முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை மாலை திருகோணமலை மூதூர் பிரதேசத்துக்குட்பட்ட சீனன்வெளி விநாயகர் ஆலயத்தில் இடம் பெற்றது.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனின் தலைமையில் இந்த முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு இடம்பெற்றது.

இந் நிகழ்வில் ஆரம்பத்தில் முள்ளிவாய்க்காலில் உயிர் நீத்த ஆத்மாக்களுக்கு ஒரு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

அதை தொடர்ந்து முள்ளிவாய்க்கால் கஞ்சி அங்கிருந்த பொது மக்களுக்கு வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது. இதில் இலங்கைத் தமிழ் அரசு கட்சியின் மாவட்டக் கிளைத் தலைவர் ச.குகதாசன் உட்பட அப்பிரதேச மக்கள் பலர் கலந்து கொண்டனர்.





# சு.க. தலைவர் விஜயதாஸவின் செயற்பாடுகளுக்கு இடையூறு விளைவிப்பதை தடுக்கும் தடையுத்தரவு



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் புதிய தவிசாளர் (தலைவர்), அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ, கட்சி செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கு இடையூறு விளைவிப்பதை தடுக்கும் வகையில் கடுவெல மாவட்ட நீதிமன்றம் தடையுத்தரவு பிறப்பித்துள்ளது.

கட்சியின் நிறைவேற்றுக் குழுக் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட புதிய நியமனங்களுக்கு அமைய கட்சியின் பதில் பொதுச் செயலாளர், சட்டத்தரணி கீர்த்தி உடவத்த மற்றும் அரசியல் குழுவும் கட்சி செயற்பாடுகளை தொடர்வதற்கு இடையூறு விளைவிப்பதை தடுக்கும் வகையிலும் இந்த உத்தரவு விதிக்கப்பட்டுள்ளது.

இசுரு அபேவர்தன மற்றும் சுமித் விஜயமுனி டி சொய்சா ஆகிய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நிறைவேற்று குழு உறுப்பினர்கள் இருவரால் 20 பேரை பிரதிவாதிகளாக குறிப்பிட்டு தாக்கல் செய்திருந்த வழக்கொன்றை விசாரணைக்கு எடுத்துக்கொண்டபோது இந்த தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.



# குறைந்த வருமானம் பெறுகின்ற குடும்பங்களுக்கு இலவச அரிசி

இலங்கையில் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு இலவசமாக அரிசியை வழங்கும் திட்டத்தின் 2 ஆம் கட்ட நடவடிக்கைகள் இம்மாத இறுதியில் ஆரம்பிக்கப்படவுள்ளன என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்ப லாபிட்டிய தெரிவித்துள்ளார். இதன் முதற்கட்டம் கடந்தமாதம்நடைமுறைப்படுத்தப்பட்டது.

குறைந்த வருமானம் பெறும் 34 லட்சம் குடும்பங்களுக்கான அரிசியை இலவசமாக வழங்கும் திட்டத்தின் 2 ஆம் கட்ட நடவடிக்கைகள் இம்மாத இறுதியில் ஆரம்பிக்கப்படும்.

இதன்படி மாவட்ட செயலகங்கள் ஊடாக தலா 10 கிலோ கிராம் அரிசியை இலவசமாக வழங்கவுள்ளோம் என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய குறிப்பிட்டுள்ளார்.

# அதிவேகமாகவும் பாதுகாப்பற்ற வகையிலும் மோட்டார் சைக்கிள் செலுத்தியவர்கள் கைது

மஹரகமை – டேங்கோ போர்ட் சந்தியிலிருந்து பன்னிபிட்டிய நோக்கி அதிவேகமாகப் பாதுகாப்பற்ற வகையில் மோட்டார் சைக்கிளை செலுத்திச் சென்ற 14 இளைஞர்கள் மஹரகமை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் பந்தயப் போட்டியில் கலந்து கொண்டுள்ளனர் எனவும், இணையத்தில் வெளியான செயலி மூலம் அவர்கள் அந்தப் போட்டியில் இணைந்தனர் எனவும் பின்னர் பொலிஸாரிடம் தெரிவித்திருக்கின்றனர்.

இதேநேரம், கைது செய்யப்பட்ட 14 இளைஞர்களும் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட நிலையில் அவர்களை எதிர்வரும் 15 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நுகேகொட நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அத்துடன், போட்டியில் பயன்படுத்தப்பட்ட 21 மோட்டார் சைக்கிள்கள் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.



# கொழும்பில் சில பாடசாலைகளுக்கு அருகில் போராட்டம் நடத்துவதற்கு நீதிமன்றம் தடை

கொழும்பில் உள்ள சில பாடசாலைகளுக்கு அருகில் போராட்டம் நடத்துவதற்கு ஸ்ரீ ஜயவர்தனபுர மற்றும் நாவலயில் உள்ள திறந்த பல்கலைக்கழக மாணவர்களுக்கு நுகேகொடை நீதிவான் நீதிமன்றம் தடை விதித்துள்ளது.

மிரிஹானை பொலிஸார் முன்வைத்த கோரிக்கையையடுத்து இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதன்படி அநுலா வித்தியாலயம், சமுத்ரா தேவி மற்றும் சுஜாதா மகளிர் வித்தியாலயம், புனித ஜோசப் மகளிர் கல்லூரி ஆகியவற்றுக்கு அருகில் போராட்டங்களில் ஈடுபட வேண்டாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீ ஜயவர்தனபுர மற்றும் நாவல திறந்த பல்கலைக்கழக மாணவர்கள் குழுவொன்று கல்விசாரா ஊழியர்களுடன் இணைந்து மேற்படி பாடசாலைகளுக்கு அருகில் எதிர்ப்புப் பேரணியை ஆரம்பிக்கவுள்ளதாகத் தமக்குத் தகவல் கிடைத்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# மின்சார சட்டமூலத்துக்கு எதிரான மனுக்கள் மீது விசாரணை நிறைவு

நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப் பட்டுள்ள உத்தேச மின்சார சட்ட மூலத்தை சவாலுக்கு உட்படுத்தி தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் மீதான பரிசீல னையை உயர் நீதிமன்றம் நிறைவு செய்துள்ளது.

இந்த மனுக்கள் மீதான பரிசீலனை நீதியரசர்கள் விஜித் மலல்கொட, ஷிரான் குணரத்ன மற்றும் அர்ஜுன ஒபேசேகர ஆகிய மூவரடங்கிய உயர் நீதிமன்ற ஆயம் முன்னிலையில் இடம்பெற்றது.

மூன்று நாள்களாக நடைபெற்ற இந்த மனுக்கள் மீதான பரிசீலனை நேற்று நிறைவடைந்த நிலையில், சட்டமூலத்தின் சட்டப்பூர்வத் தன்மை தொடர்பில் உயர்நீதிமன்றத்தின் வியாக் கியானம் சபாநாயகருக்கு அனுப்பி வைக்கப்படும் என நீதியரசர்கள் குழாம் அறிவித்துள்ளது.

இலங்கை மின்சார ஊழியர் சங்கம், முன்னிலை சோஷலிசக் கட்சி உள்ளிட்ட 14 தரப்பினரால் இந்த மனுக்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.



நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப் பட்டுள்ள மின்சார சட்டமூலத்தின் சில சரத்துகளினால், அரசமைப்பின் கீழ் உத்தரவாதம் அளிக்கப்பட்ட அடிப்படை உரிமைகள் மீறப்படுகின்றன என மனுதாரர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இதன்படி, இந்த சட்டமூலம் நாடாளு மன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும் பான்மை மூலம் நிறைவேற்றப்பட்டு சர்வஜன வாக்கெடுப்பின் மூலம் அங் கீகரிக்கப்பட வேண்டும் என உத்தரவிடக் கோரி மனுதாரர்கள் இந்த மனுவை சமர்ப்பித்திருந்தனர்.

# இன்றைய ராசி பலன்கள் - 14.05.2024


மேஷம்

உங்கள் புத்திசாலித் தனத்தை வளர்த்து அதன் மூலம் பிரகாசிக்கலாம். கலை மற்றும் இசை போன்றவற்றில் ஈடுபட்டு பயன டையலாம். உங்கள் வளர்ச்சிக்கு இன்றைய நாளைப் பயன்படுத்தலாம். இன்று அதிக முயற்சி எடுத்து அதிக பலன் பெறும் நாள்.

உங்கள் பணியில் வளர்ச்சி காணப்படும். புதிய விஷயங்களை கற்றுக்கொள்வீர்கள். பணி நிமித்தமான பயணங்களுக்கு வாய்ப்பு உள்ளது.

உங்கள் துணையிடம் பழகும் போது நகைச்சுவை உணர்வு வெளிப்படும். இது உறவின் நல்லிணக்கத்தை மேம்படுத்தும். இன்று பணப்புழக்கம் தேவையைக் காட்டிலும் அதிகமாக காணப்படும்.


ரிஷபம்

உங்கள் முயற்சிகள் பலன் தரும் நாள். சுய வளர்ச்சி உங்களுக்கு வழி காட்டும். பயணங்கள் ஏற்படலாம்.

உங்கள் திறமை உங்கள் பணியில் வெளிப்படும். உங்கள் பணிக்கு பாராட்டு கிடைக்கும் நல்ல வாய்ப்பு இன்று காணப்படும்.

உங்கள் துணையிடம் நேர்மையாகப் பழகுவீர்கள். இதனால் அவர் உங்களை நன்கு புரிந்துகொள்ள உதவும்.

இன்று பணம் அதிக அளவில் காணப்படும். உங்களால் சேமிக்க இயலும்.

உங்களிடம் காணப்படும் திருப்தி காரணமாக உங்கள் ஆரோக்கியம் இன்று சிறப்புடன் காணப்படும்.


மிதுனம்

இன்று சாதகமான நாள் அல்ல. மன உளைச்சலை சமாளிக்க அமைதியாக இருக்க வேண்டும். உங்கள் விருப்பங்களை அடைவதற்கு ஏதோ ஒன்று குறைவது போல உணர்வீர்கள்.

நீங்கள் வெற்றி பெறுவதற்கு சரியாக திட்டமிட வேண்டியது அவசியம். உங்களின் பாதி வேலை முடியும், இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.

உங்கள் உறவு செழித்து வளர உங்கள் சஞ்சலமான மனது உகந்ததல்ல. உங்கள் துணையிடம் உங்கள் உள்ளத்தை வெளிபடுத்த முடியாது. இன்று அனுசரணை தேவை.

பணம் இன்று குறைந்து காணப்படும். பண வரவு காணப்பட்டாலும் அதில் திருப்தி இருக்காது. பண இழப்புக்கான வாய்ப்பு உள்ளது. தொண்டை சம்பந்தமான ஒவ்வாமை ஏற்பட வாய்ப்புள்ளது. குளிர்ச்சியான பொருட்களை உட்கொள்வதை தவிர்க்க வேண்டும்.


கடகம்

இன்று விரைவான முடிவுகள் எடுப்பதை தவிர்க்க வேண்டும். இதனால் நல்ல வாய்ப்புகளை இழக்காமல் தடுக்கலாம்.

உங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிக்க இயலாது. இது உங்களுக்கு கவலையைத் தரும். உங்கள் சக பணியாளர்களிடமிருந்து சில தடைகளை எதிர்கொள்ள நேரும்.

எளிய விஷயங்களையும் இன்று கடுமையாக உணர்வீர்கள். உங்கள் துணையுடன் நல்லுறவு பாரமரிக்க உங்களை மாற்றிக் கொள்ள வேண்டும். சகஜமாக இல்லாவிட்டால் திருப்தி கிட்டாது.

தேவையற்ற செலவுகளால் உங்கள் பணம் கரையும். சேமிப்பதற்கும் குறைந்த வாய்ப்பே உள்ளது.

இன்று தலைவலி ஏற்பட வாய்ப்புள்ளது. உங்கள் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.


சிம்மம்

உங்களுக்கு சாதகமான பலன்கள் கிடைக்க வேண்டும் எனில் உங்கள் அணுகுமுறையில் கவனம் தேவை. பாடல்கள் கேட்பது, திரைப்படம் பார்ப்பது உங்களுக்கு நல்லது.

உங்கள் பணியில் தவறுகள் நேர வாய்ப்புள்ளதால் எச்சரிக்கையுடன் பணியாற்ற வேண்டும். இதனால் செய்த வேலையையே திரும்ப செய்ய நேரும்.

தகவல் பரிமாற்றத்தில் சில குழப்பங்கள் காணப்படும். இதனால் உங்கள் துணையுடன் கடுமையாக உணர்வுகளை வெளிபடுத்துவீர்கள். இதனை தவிர்த்தல் வேண்டும். விட்டுக் கொடுப்பதன் மூலம் மகிழ்ச்சியை தக்க வைக்கலாம்.

நிதியைப் பொறுத்தவரை உங்கள் எதிர்பார்ப்பு அதிகமாக இருக்கும்.


கன்னி

இன்றைய நாள் அபாரமாக இருக்கும். உங்களின் சிறந்த தகவல் பரிமாற்றம் மூலம் நெருங்கியவர்களின் இதயத்தை தொடுவீர்கள். உங்களின் தன்னம்பிக்கை அதிகரிக்கும்.

உங்கள் பணி செய்யும் முறையை மேம்படுத்துவீர்கள்.சக பணியாளர்களுக்கு உதாரணமாகத் திகழ்வீர்கள். உங்கள் பணி உங்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படும்.

வெளியிடங்களுக்கு அழைத்துச் செல்வதன் மூலம் உங்கள் துணையை மகிழ்ச்சிப்படுத்தலாம். நீங்கள் பொருத்தமான ஜோடிக்கு உதாரணமாகத் திகழ்வீர்கள்.

இன்று வரவு அதிகமாக காணப்படும். இன்று சுதந்திரமான நிதிநிலைமை காணப்படும். உங்கள் வங்கியிருப்பு அதிகரிக்கும் வாய்ப்பு உள்ளது.

நீங்கள் தேக ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள்.


துலாம்

உங்கள் புத்திசாலித்தனத்தை பயன்படுத்தி இன்றைய நாளை ஆக்கபூர்வமான நாளாக ஆக்கலாம். உறுதி மற்றும் முறையான திட்டமிடல் மூலம் உங்கள் இலக்குகளை அடையலாம். இன்றைய நாள் பயனுள்ளதாக அமையும்.

இன்று பணியிடத்தில் அபாரமான வெற்றி கிடைக்கும். உங்கள் பணியில் கூடுதல் பலன்களும் கிடைக்கும்.

நீங்கள் உங்கள் துணையிடம் நேர்மையாக இருப்பீர்கள். தகவல்களை சிறந்த முறையில் பரிமாற்றம் செய்வீர்கள். உங்கள் வசீகரமான பேச்சு உங்கள் துணையை மகிழ்ச்சியுறச் செய்யும்.

நிதியைப் பொறுத்தவரை இன்று சிறப்பான நாள். இன்று சேமிப்பதற்கான வாய்ப்பு உள்ளது.


விருச்சிகம்

இன்று சவால்கள் மிகுந்த நாள். எனவே அமைதியாக எதையும் லேசாக எடுத்துக் கொள்ள வேண்டும். இன்று சூழ்நிலைகளை அனுசரித்து நடந்து கொள்ள வேண்டியது அவசியம்.

பணிகள் இறுக்கமாக காணப்படும். இன்று திட்டமிட்டு தொழில் சார்ந்த முறையில் பணியாற்றினால் சிறந்தது.

மனதில் கவலை தரும் எண்ணங்களை வளர்ப்பீர்கள். இதனை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். மகிழ்ச்சியைத் தக்கவைக்க இந்த உணர்வைத் தவிர்த்தல் வேண்டும்.

பண வரவு திருப்திகரமாக இருக்காது. தேவையற்ற செலவுகள் ஏற்படும். இதனால் வருத்தப்படுவீர்கள்.

இன்று முதுகு வலி ஏற்படலாம். இசையை கேட்பதன் மூலம் அல்லது தியானம் மூலம் அமைதி பெறலாம்.

# இன்றைய ராசி பலன்கள் - 14.05.2024




இன்றைய நாள் மகிழ்ச்சிகரமாக காணப்படாது. உங்கள் மனதில் காணப்படும் குழப்பம் காரணமாக உங்கள் ஆர்வம் குறையும். உங்கள் வளர்ச்சி பாதிக்கப்படும். முடிவெடுப்பதற்கு முன் ஒன்றிற்கு இரண்டு முறை யோசிக்க வேண்டும்.

பணிகளை திட்டமிட்டு ஆற்ற வேண்டும். பணிச்சுமை அதிகமாக காணப்படும். உங்களை தயார்படுத்திக் கொள்வதன் மூலம் வெற்றியை அடையலாம்.

உங்களின் மாறுபடும் மன நிலையை உங்கள் துணையிடம் வெளிபடுத்துவீர்கள். இந்த உணர்வை தவிர்த்து அமைதியாக இருங்கள்.

உங்களிடம் குறைந்த அளவு பணமே காணப்படும். பணம் சேர்ப்பதற்கு தடைகள் காணப்படும். சில பரபரப்பான தருணங்களை சந்திக்க நேரும்.




இன்று அமைதி நிலவும் நாள். உங்களை நிரூபிக்க வாய்ப்பு கிடைக்கும் நாள். உங்கள் விருப்பங்கள் நிறைவேறும் நாள். உங்கள் முயற்சிகள் பலன் தரும் நாள்.

நீங்கள் உங்கள் பணிகளை எளிதாக செய்து முடிப்பீர்கள். திறமையுடன் திட்டமிட்டு உங்கள் பணிகளை குறித்தநேரத்தில் முடிப்பீர்கள்.

காதல் வயபட்ட உணர்வுகளை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். உங்கள் பிரியமானவர் உங்களை நேசிப்பார்.

உங்கள் பணம் சம்பாதிக்கும் திறன் அதிகரிக்கும். உங்கள் சேமிப்பு அதிகரிக்கும். இன்று செழிப்பான நிலை காணப்படும். இன்று உங்களுக்கு தேவையான ஆற்றல் காணப்படும்.




உங்கள் வீட்டில் விருந்தினர் வருகையால் இன்று உற்சாகம் காணப்படும். மகிழ்ச்சியாக இருக்க இது ஒரு நல்ல வாய்ப்பு. முக்கியமான முடிவுகள் எடுக்க இன்றைய நாளை பயன்படுத்திக் கொள்ளலாம்.

பணியிடத்தில் வெற்றியும் மகிழ்ச்சியும் கிடைக்கும். உங்கள் சக பணியாளர்களிடம் உங்கள் கருத்துக்களை பகிர்ந்து கொள்வீர்கள். அவர்களின் முழு ஆதரவு கிடைக்கும்.உங்கள் துணையிடம் இனிமையாகப் பேசுவீர்கள். உங்களின் இந்த அணுகு முறையால் உங்கள் பிரிய மானவர் மகிழ்ச்சியடைவார்.இன்று உங்கள் பணத் தேவைகள் பூர்த்தியடையும் நாள். இன்று உங்களுக்கு பெரிய அளவில் பணம் கிடைப்பதற்கான அதிர்ஷ்டமான நாள்.




இன்று முக்கிய முயற்சிகள் கூட சிறந்த பலன்களை அளிக்காது. நீங்கள் அசௌகரியமாக உணர்வீர்கள். பிரார்த்தனை மற்றும் தியானம் மேற்கொள்வது உங்களுக்கு நல்லது.

உங்கள் பணியில் ஏமாற்றத்தைக் காண்பீர்கள். பணியில் தவறுகள் நேர வாய்ப்புள்ளது. உங்கள் பணிகளை முடிப்பதற்கு கவனம் செலுத்துங்கள்.

உங்கள் துணையிடம் உணர்சிவசப்படுவீர்கள். இதனை தவிர்த்து நேர்மையுடன் நடந்து கொள்ள வேண்டும்.

இன்று பண இழப்பிற்கான வாய்ப்புகள் அதிகம். இன்று அதிர்ஷ்டம் குறைந்து காணப்படும். நிதிநிலைமை செழிப்பாக இருக்காது. அதிக மன உளைச்சல் காரணமாக நீங்கள் சோர்வாக காணப்படுவீர்கள்.

